அலை

12

ஆசிரியர் குழு:-

ஐ. சண்முகன்
மு. புஷ்பராஜன்
அ. யேசுராசா

"மார்க்ஸியத்தின் மனிதாபிமான உள்ளடக்கத்தை அங்கீகரிக்கும் போதும்கூட கலைஞனின் சார்பு நிலை—மனித சமூகத்துடனும் மனித நிலைப்பாடுகளுடனும்தான்; அவனோடும் அவனது கலையோடுமுள்ள சார்புநிலையின் இயல்பான தொடர்ச்சியே இது. சித்தாந்தத்தின் கடும்பிடிப்புகளையோ, அரசியல் போக்குகளின் கருத்துவேறுபாடுகளையோ அவன் அனுசரிக்க வேண்டுமென்பதில்லை. காரணம் கலைஞனின் தனிப்பார்வை சித்தாந்தத்துடன் சார்ந்து நிற்க வேண்டியதில்லை. ஒரு கலைப்படைப்பின் வெளியீட்டு ஊடகங்கள் சித்தாந்தரீதியிலான தன்மையோ உற்பத்தியோ உள்ளவை அல்ல. யதார்த்தம் என்னவென்று வரையறுக்க அரசாங்கத்திற்கோ பொலிட்பீரோவுக்கோ முடியாது. சமூகத்தோடுள்ள கலையின் தொடர்பை விளக்குமிடத்தில் மட்டுமே சித்தாந்தம் முக்கியத்துவமுடையது இதுவுமெனில் கலைப்படைப்பு நிகழ்ந்த பின்பு நடக்கிறஒன்று. கலை என்னவாக இருக்கவேண்டுமென்றும், எப்படி இருக்கவேண்டுமென்றும் கட்டளையிடுகிற கட்சிகளும் தலைவர்களும் இவ்விதத்தில் தம்மைத்தாமே பரிகாசத்துக்குரியவர்களாக்கிக் கொள்கிறார்கள். சித்தாந்தத்தோடுள்ள நம்பிக்கையை விடவும் மிகவும் முக்கியம் வாழ்க்கையோடும், ஒப்பாகவே கலையோடுமுள்ள நம்பிக்கைதான்".

—சச்சிதானந்தன்

('கலையும் மார்க்ஸியமும்' என்றகட்டுரையில்.
நன்றி: பரிமாணம்—1 தமிழ் நாடு)

கார்த்திகை — மார்கழி 1978 ரூபா 1-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்

1975ன் பிற்பகுதி. ஸ்தாபித பலம்பெற்
றிருந்த வறட்டிலக்கிய வாதிகள்; கும்பல்
களோடு வெறுமனே ஒத்தோடியவர்கள்;
தேசிய இன ஒடுக்குமுறைகளைக் கண்டும்
மௌனம் சாதித்த, 'போலி முற்போக்கு
கள்' போன்றோருக் கெதிரான 'கலகக்குர
லாக'—அதிருப்தியாளர்களின் வெளிப்பா
டாகவே 'அலை' வெளிவரத் தொடங்கி
யது. மூன்று வருடங்கள்—12 இதழ்களின்
பின்னால் மீள்பார்வை செலுத்துகையில்,
நியாயமாகவே நாங்கள் பெருமைப்படலா
மென நம்பிக்கை ஏற்படுகிறது. ஆரம்ப
நோக்கங்களிலிருந்து இதுவரை நாங்கள்
வழுவிச் சென்றிருக்கவில்லை; எச்சந்தர்ப்பத்
திலாவது சுய இலாபங்களுக்காக 'ஒத்தோ
டுபவர்களாகவும்' இருந்திருக்கவில்லை. இங்
கும் தமிழகத்திலுமாக உண்மைக்கலை, இலக்
கிய நேசிப்பினைக் கொண்டவர்கள் அளித்த
பாராட்டுக்கள் அதனை உறுதிப்படுத்துகின்
றன. சிலர் குழு மனோபாவத்தினால் இதை
வெளிப்படையாகக் கூறுவதைத் தவிர்த்துக்
கொண்டபோதிலும் தனிப்பட்ட கதைப்பு
களிலும், குழு உரையாடல்களிலும் அவர்
கள் கூட ஒத்துக் கொள்வதாகவும், நாம்
அறிந்துள்ளோம். உண்மையில் இதுவும்
நமது 'இலக்கிய சமூகத்தில்' காணப்படும்
போலித்தனங்களிலொன்றின் வெளிப்
பாடே. தொடர்ந்து இயக்கம் மேலும்வலிமை
யான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடுமாயினும்
சக்தியை மீறிச்செல்லும் புறநிலைமைகளினால்
'அலை இலக்கிய வட்டத்தினரின்' சஞ்சிகை
வெளிப்பாடு. தற்காலிகமாய்ஸ்தப்பிதமடை
கிறது. எனினும் 'அலை இயக்கம்' வேறுவடி
வங்களில் தொடர்ந்தும் செயற்படும். இச்
சந்தர்ப்பத்தில், எம்மோடு இதுவரை ஒத்து
ழைத்த அனைவருக்கும் ஆசிரியர் குழுவின்
சார்பில், நன்றிகளைத் தெரிவிக்கிறேன். எந்
தவிதக் கட்டுப்பாடுகளும், எதிர்பார்ப்பு
மின்றி பெறுமதிமிக்க தனது அச்சுச் சாத
னங்களை, மூன்றாண்டுகளாக எமக்குதவிய
நண்பர் என். கே. மகாலிங்கத்துக்கு, விசே
டமாகநன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்
ளோம்.

* * *

தேசிய உணர்வுடன் நடந்து கொள்வ
தாக எண்ணி நமது கலை, இலக்கியக்கா
ரர் சிலர் கருத்து வெளியிடுகையில், 'தேசி
யத் தாழ்வுச் சிக்கலொன்றினால்' இவர்கள்
பீடிக்கப்பட்டுள்ளார்களோ வென்ற சந்தே
கம் பல சந்தர்ப்பங்களில் எமக்கு ஏற்படு
கிறது. 'தென்னிந்தியக்குப்பைகள்' என்று
ஒரேயடியாய் விளாசுகையில் (வட இந்தி
யக் குப்பைகள், ஹொலிவூட் குப்பைகள்
பற்றி இவர்கள் வாய்திறக்க விரும்புவ
தில்லை!) ஏதோ தமிழ்நாடு முழுவதுமே
'பெரிய குப்பை' போலவும், - இங்குதான்
எல்லாம் சுத்தமாய் இருப்பதைப் போல
வும், தரமானகலை, இலக்கியங்கள் செழித்து
வளர்ந்து நிறைந்துள்ளதைப் போலவும்ஒரு
தோற்றத்தை அழுத்திக் காட்டுகிறார்கள்.
தமிழ் நாட்டை நக்கலடிப்பதில் இவர்களிற்
குக் குரூரமான சந்தோஷம்! இப் போலித்
திருப்திக்காக உண்மைநிலைமைகள் அடிக்கடி
திரிபுபடுத்தப் படுகின்றன. தகவல்
தொடர்புச் சாதனங்களின் சமமற்ற வளர்ச்
சியினால் தமிழகத்திலுள்ள நல்லெண்ணங்
கொண்ட பலர், இதை அப்படியேநம்பியும்
விடுகின்றனர். சமீபத்தில் வந்த ஒரு விட
யத்தை நாம் எடுத்துப் பார்க்கலாம். 'சிக
ரம்' (செப்ரெம்பர்—1978) என்ற தமிழக
இதழின் பேட்டியில் 'டொமினிக் ஜீவா'
பின் வருமாறுகுறிப்பிட்டுள்ளார்''.. உங்கள்
நாட்டில் புஷ்பா தங்கதுரை, குமாரிபிரே
மலதா, சாண்டில்யன், மணியன் போன்ற
எழுத்தாளர்கள் இருப்பது போல் எங்கள்
நாட்டில் அந்த ரக எழுத்தாளர்கள் கிடை
யாது''. இது உண்மைதானா? எவ்விதக்கலை
நோக்கமுமற்ற-வாசகரின் பொழுது போக்கு
இரசனைக்குத் தீனி போடுகிற—பாலுணர்
வைத் தூண்டுகிற படைப்புகளைப் படைக்
கிறவர்கள் இந்த எழுத்தாளர்கள்.
'ஹலோ...!'; 'லீலை' என்ற ஆபாசத்
தொடர்களை எழுதிய 'ராமேஷ்'; 'பட்லி'
'ஜமீலா' புகழ் ஜி. நேசன்; மொழிவா
ணன்; ரஜனி; கே. எஸ். ஆனந்தன்;
ந. பாலேஸ்வரி போன்றோர் இங்கிருப்
பதை 'ஜீவா' ஏன் மறைக்கிறார்? வீரகேச
ரிப் பிரசுரங்களில் பெரும்பாலானவை
வெறும் பொழுது போக்குக்குமட்டும் உரிய
னவல்லவா? 'ஜனமித்திரன்' வெளியீடுகளை
எழுதியவர்களெல்லாம் உன்னத இலக்கி
யகாரர்களாகி விட்டனரா? ''குமுதம்,
குங்குமம், இதயம் போன்ற கவர்ச்சிபபத்
திரிகைகள் எதுவும் ஈழத்துத் தமிழர்க
ளால் நடத்தப்படவில்லை'' என ஜீவா
மேலும் சொல்கிறார். 'தீதா', 'கதம்பம்'
'மித்திரன் வாரமலர்' போன்றவை இன்
னும் இங்கு வந்துகொண்டுதானேயுள்ளன!
'ராதா' 'ரோஜாப்பூ', 'மாணிக்கம்' எனமுன்
பும் வந்தனவே! இவையெல்லாம் ஈழத்தமி
ழர்களால் நடத்தப்படவில்லையா? அல்லது
இவையெல்லாம் தரமானவையென்றுஅவர்
கருதி விட்டாரா?

—அ. யேசுராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சீயவாதிகளும் தேசிய இனப்பிரச்சினையும்

மைக்கல் லோவி

தமிழாக்கம்: ஏ. ஜே. கனகரட்ணு

(முற்ருெடர்)

லெனின்

லக்ஸ்செம்பெர்க், ரொட்ஸ்கி, பனக்கோயேக் ஆகியோரைப் போன்றுதான், லெனினும் தொழிலாளி வர்க்கசர்வதேசியம் என்ற தொடங்கு நிலையிலிருந்து தேசிய இனப்பிரச்சினையை அணுகிருர். ஆனல், புரட்சிகர இடது சாரித் தோழர்களைவிட சர்வதேசியத்திற்கும் தேசிய உரிமைக்குமிடையே உள்ள இயக்கவியல் தொடர்பை லெனின் நன்கு புரிந்து கொண்டார். முதலாவதாக, பிரிந்து செல்லும் சுதந்திரமே தேசிய இனங்களுக்கிடையே சுதந்திரமான, தன்விருப்பார்ந்த ஒத்துழைப்பையும், கூட்டுறவையும், இறுதியில்ஒருங்கிணைப்பையும், சாத்திய மாக்கும் என்பதை அவர் உணர்ந்தார். இரண்டாவதாக, அடக்கியொடுக்கும் தேசத்திலுள்ள தொழிலாளி இயக்கம் அடக்கியொடுக்கப்பட்ட தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதினுலேயே ஒடுக்கப்பட்டவர்களின்பகைமையையும் ஐயுறவையும் போக்கி, முதலாளிவர்க்கத்திற்கெதிரான சர்வதேசப் போராட்டத்தில் இரு தேசிய இனங்களின் தொழிலாளி வர்க்கங்களையும் ஒன்றுபடுத்த முடியும் என, அவர் மேலும் உணர்ந்தார்.

இதேபோன்று, தேசிய – ஜனநாயக போராட்டங்களுக்கும் சமுகவுடைமைப்புரட்சிக்குமிடையே உள்ள இயக்கவியல் தொடர்பை லெனின் புரிந்துகொண்டார். அடக்கியொடுக்கப்பட்ட தேசிய இனத்தின் வெகுஜனங்கள் (தொழிலாளிவர்க்கம் மட்டுமன்று, விவசாயிகளுப், குட்டிமுதலாளிகளும்) பிரக்ஞையுள்ள தொழிலாளி வர்க்கத்தின் நண்பர்கள் என்பதை அவர் விளக்கிருர். முதலாளித்துவத்திற்கும், முதலாளித்துவ அரசிற்கும் எதிராக இந்த 'பல்வேறுபட்ட, முரண்பட்ட, பல்தரப்பட்ட கும்பலின்' (''பிற்போக்கான கற்பனைகளையும், தவறுகளையும், பலவீனங்களையும்'' கொண்ட குட்டி முதலாளிகளும், பின்தங்கிய தொழிலாளர்களும் இதில் அடங்குவர்) போராட்டத்திற்கு தலைமை தாங்குவது பிரக்ஞையுள்ள தொழிலாளி வர்க்கத்தின்பணி. ரஷ்யாவைப் பொறுத்தவரை, ஏப்ரல் 1917க் குப்பின்னரே—நிரந்தரப் புரட்சிக் கொள்கையை லெனின் கடைப்பிடிக்கத் தொடங்கியதும்—ரஷ்யப் பேரரசிற்குள்ளிருந்த அடக்கியொடுக்கப்பட்ட தேசியஇனங்களின் தேசியவிடுதலைப்போரை ஜனநாயக இயக்கமாக மட்டுமல்ல சோவியத் சமூகவுடைமைப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் நண்பனுகவும் லெனின் காணத் தொடங்கிஞர் என்பது உண்மையே.

முறையியல் நோக்குக்கோணத்தில்' பெரும்பாலான சமகாலத்தவர்களிலிருந்து லெனின் மேம்பட்டு நிற்பதற்குமுக்கியகாரணம் 'அரசியலைத் தலைமை தாங்க நெறிப்படுத்திவிடும்' அவரது ஆற்றலே. ஒவ்வொரு பிரச்சினையினதும்,ஒவ்வொரு முரண்பாட்டினதும் அரசியல் பரிமாணத்தை இனங்கண்டு அதற்கு முக்கியத்துவமளிப்பதில் அவர் விடாப்பிடியாக, விட்டுக்கொடுக்காத.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாநெஞ்சம் கொண்டவராய் விளங்கினர்.

தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, பெரும்பாலான ஏனைய மார்க்சிய எழுத்தாளர்கள் அதன்பொருளாதார, கலாசார, உளவியல்' பரிமாணங்களைமட்டுமே கண்டபொழுதில், சுயநிர்ணய பிரச்சினை முழுக்கமுழுக்க அரசியல் ஜனநாயகத் துறைக்கேபிரத்தியேகமாக உரியது'' என லெனின் தெட்டத் தெளிவாகக் கூறினர். (அதாவது, அரசியல் ரீதியாக பிரிந்து சென்று சுதந்திரமான தேசிய அரசைநிறுவும் உரிமைத்துறையைச் சார்ந்தது) மேலும் தனக்கும் ஏனையவர்களுக்குமிடையேஇருந்த வேறுபாடுகளிற்கான முறையியல் அடித்தளத்தினைலெனின் நன்குஉணர்ந்திருந்தார்:'' 'தன்னாட்சி உரிமை' பெற்றுள்ள தேசிய இனம் 'இறைமை'யுள்ள தேசிய இனத்திற்குச் சமமாக உரிமைகளை அனுபவிப்பதில்லை; அரசியல் கருத்துருவங்களையும், வகைப்பாட்டு முறைகளையும் ஆய்வதை எமது போலிஷ்தோழர்கள் பிடிவாதமாக தவிர்த்திருக்காவிட்டால்இதனை அவர்கள்உணரத்தவறியிருக்கமாட்டார்கள்'அரசியல்செயற்பாங்குகள் ஒரளவு தன்னாட்சிவாய்ந்தவை என்பதை லெனின் புரிந்து கொண்டதால், தேசிய இனப்பிரச்சினையைஆராயும்போது அகநிலைப்பாடுவாதத்தையும் பொருளியல் வாதத்தையும் அவரால்தவிர்த்துக்கொள்ள முடிந்தது.

லெனினைக் கவர்ந்த (தேசிய இனப்பிரச்சினையின்) அரசியல் பரிமாணம் இராஜதந்திரிகளும், படைகளும் அக்கறை கொள்ளும் பரிமாணமல்ல எனக் கூறவேண்டியதில்லை. இந்த அல்லது அந்ததேசியஇனத்திற்கு சுதந்திர அரசு உண்டோ அல்லது இருஅரசுகளுக்கிடையிலான எல்லைகள் என்ன என்பவை பற்றி அவர்அக்கறைப்படவேயில்லை. அவரது குறிக்கோள்ஜனநாயகமும் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையுமே. இவை இரண்டிற்கும் தேசியஇனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்பட வேண்டும், மேலும் அரசியல் பரிமாணத்திலேயே புலன் செலுத்துவதினுல் அவரது சுயநிர்ணயக் கொள்கை தேசியவாதத்திற்கு எந்தவித விட்டுக்கொடுப்பும் செய்யவில்லை; அது ஜனநாயகப் போராட்டத்தினதும், தொழிலாளி வர்க்கப் புரட்சியினதும் துறையிலேயே நிலை பெற்றுள்ளது.

லெனினின் நோக்கில் இவ்விரு குறிக்கோள்களும் சம முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லையென்பது உண்மையே; உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் நலன்களே ஜனநாயகக் கோரிக்கைகளைவிட முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக லெனினின் கருத்துப்படி, குறிப்பிட்ட ஒரு குடியரசு இயக்கம் பிற்போக்கின் கருவியாகவிருந்தால், மார்க்சியவாதிகள் அதனை ஆதரிக்கமாட்டார்கள். இதன் தாற்பரியம் தொழிலாளர் இயக்கம்குடியரசுவாதத்தை தனது வேலைத்திட்டத்திலிருந்து நீக்கிவிடவேண்டும் என்பதல்ல, இதே போன்றுதான் சுயநிர்ணயத்தைப்பொறுத்தவரையும். சிலபுறநடைகள் இருந்தபோதிலும், ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் பிரிந்து செல்லும் உரிமை இருந்தலே பொதுவிதி. உண்மையில், தொழிலாளரிடையே சர்வதேச ஒற்றுமையை உருவாக்குவதற்கு சுயநிர்ணய அங்கீகாரம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்ற லெனினின் ஆய்வு 'புறநடைகளின்' (அதாவது, தொழிலாளிவர்க்க நலன்களுக்கும் தேசிய இனங்களின் ஜனநாயகஉரிமைகளுக்குமிடையே முரண்பாடு) சாத்தியப்பாட்டைக் கூடத்தவிர்க்கும் போக்கை உள்ளடக்கியது எனலாம்.

முடிவு: வரலாற்றின் படிப்பினை:-

தேசிய இனப்பிரச்சினை குறித்து மார்க்சியவாதிகளிடையே ஏற்பட்ட குறிப்பான விவாதங்களுக்கு வரலாறு விடையளித்து விட்டது. 1ம் உலகப் போருக்குப் பின்னர், பல இனங்களைக் கொண்டிருந்த அவுஸ்திரியா—ஹங்கேரி அரசு பற்பல தேசிய அரசுகளாக சிதைந்தது. "சாராம்சத்தில் பிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கான தேசிய இனம்'' என எங்கெல்சால் வர்ணிக்கப்பட்ட 'பாஸ்க்ஸ்' இன்று ஸ்பெயினில் புரட்சிகர போராட்டத்தின் உச்சத்தில் நிற்கின்றனர். முதலாளித்துவ கற்பனவாதம் என லக்ஸ்செம்பெர்க்கால் சுட்டப்பட்ட போலாந்தின் மறுஇணைவு 1918இல் நனவாகியது. 'வரலாற்று அடிவழியாகவராத' செக்இனம்—'தேசிய வீரியம்' இல்லாததால் அது மறைந்துவிடுவதுதிண்ணம் என எங்கெல்ஸ் கூறினர்—ஸ்லோவாக் இனத்துடன் தன்விருப்பார்ந்த அடிப்படையில் இணைந்து ஓர் அரசினை நிறுவியது.

தேசிய இனம் என்பது வெறுமனே கருத்தியலான, புறநிலை அளவு கோல்களின் தொகுப்பு அல்ல என்பதனை 1917க்குப் பின்னர் நிகழ்ந்த வரலாறு எண்பிக்கிறது. அகநிலைப்பாடான கூறு அதாவது தேசிய இன அறிவுணர்வு, தேசிய இன அரசியல் இயக்கம் ஆகியவையும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த 'அகநிலைக் காரணிகள்' வானத்திலிருந்து விழுந்தவையல்ல என்பது வெளிப்படை; சில வரலாற்று நிலைமைகளின்—துன்புறுத்தல், அடக்கியொடுக்குதல் ஆகியவை—விளைவே இவை. இதிலிருந்து 'சுயநிர்ணயம்' என்ற பதத்திற்கு இன்னும் விரிவான அர்த்தம் இருக்க வேண்டுமென்பது புலனாகின்றது; அது 'பிரிவினை'யை மட்டுமல்ல, 'தேசிய இனத்தின் உளதாம் தன்மை'யோடு தொடர்பு பட்டிருத்தல் வேண்டும். ஒரு சமூகம் தேசிய இனமா இல்லையா என்பதை அந்தச் சமூகமே தீர்மானித்தல் வேண்டும். 'புறநிலைப்பாடான அளவு கோல்களை' (ஸ்டாலின் வகையினத்தைச் சார்ந்த) ஏந்திய, வரட்டுவாத புத்தகப்புழு வல்லுநர்கள் அல்ல, (ரொட்ஸ்கியின் கூற்றை ஒப்பு நோக்குக: அமெரிக்க கறுப்பினத்தவரைப் பற்றி அவர் கூறியதாவது; ''இவ்விடயத்தில் வெறும் கருத்தியலான அளவுகோல் அல்ல, வரலாற்றுணர்வும் உணர்வுகளுமே வரையறுப்பானவை'')

மாறாக, வுட்ரோ வில்சனின் காலத்திலிருந்து, ஜனநாயகம், தேசங்களின் சமத்துவம், சுயநிர்ணய உரிமை என்ற சுலோகங்களை அபகரித்ததன்மூலம் வல்லரசுகளின் தேசிய வாதம் தனது கோட்பாட்டு ஆயுதக் களஞ்சியத்தை மீண்டும் நிரப்பிக் கொண்டது. எங்கும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் இக் கொள்கைகளைப் பிரகடனம் செய்கின்றனர். ''சுயநிர்ணயக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக, தென்வியத்நாம் மக்கள் தமது எதிர்காலத்தை சுதந்திரமாகத் தேர்ந்து கொள்வதற்காக, நாம் போராடுகிறோம்'' என1956இல் அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் கூறினர். 19ம்நூற்றாண்டுக்குப் பின்னர்-அப்பொழுது ஆபிரிக்காவில் கிளர்ச்சியொன்று ஏற்பட்ட சமயம் ரெயிட்ஸ்கே என்பவர் பின்வருமாறு எழுதினர்: ''காட்டுமிராண்டிகளுடன் போரிடும்போது சாதாரணமாக போரில் கடைப்பிடிக்கும் கொள்கைகளை மேற்கொள்ளுவது வெறும் பரிகாசமே. காப்பிரி சிற்றினத்தைத் தண்டிப்பதற்கு அதன் கிராமங்களுக்கு தீமூட்ட வேண்டும், ஏனென்றல் அது ஒன்றே பயன் முனைப்பான பரிகாரம்''—சிறு தேசிய இனங்கள் குறித்து வல்லரசுகள் கடைப்பிடிக்கும் கொள்கை இனங்கண்டுகொள்ள முடியாத அளவிற்கு எவ்வளவு மாற்றமுற்றிருக்கின்றது!.

இன்று தொழிலாளி இயக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது லக்ஸ்செம்பெர்க் போன்ற நல்லெண்ணங் கொண்டவர்களின் தவறுகளால் ஏற்படும் 'குழந்தைப்பிள்ளைத்தனமான கோளாறு' அல்ல. பேரின வாதம், முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு சரணடையும் சந்தர்ப்பவாதம் (ரஷ்ய, சீன அதிகாரப்பணிக்குழு வர்க்கங்களாலும் அவர்களின் சீடர்களாலும் அனைத்துலகிலும் இவை பரப்பப்பட்டு வருகின்றன) ஆகியவையே இன்று பெரும் தீங்கை விளைவிக்க வல்ல 'வைரசுக்கள்'. தேசிய இனப்பிரச்சினை குறித்த 'அதிதீவிர இடது சாரிவாதம்' இன்று பெரும்பாலும் மடிந்து விட்டது. புரட்சிகர இடதுசாரி வட்டாரங்கள் சிலவற்றில்தான் இன்றும் லக்ஸ்செம்பெர்க்கின் கருத்துக்கள் ஈனமாக எதிரொலிக்கின்றன: 'தொழிலாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க ஒற்றுமை'யினதும் சர்வதேசியத்தினதும் பேரால் தேசிய விடுதலை இயக்கங்கள் கருத்தியலாக எதிர்க்கப்படுகின்றன. இதே போன்றுதான் 'பிற்போக்கான தேசிய இனங்கள்' என்ற எங்கல்சின் கருத்தைப் பொறுத்தவரையும். இன்றையதேசியஇனப் பிரச்சினைகள் சிலவற்றை நோக்குவோமாயின்—தேசிய, குடியேற்ற, சமய, இன அம்சங்கள் பின்னிப்பிணைந்திருக்கும் சிக்கலான பிரச்சினைகள்—எடுத்துக்காட்டாக அராபிய—இஸ்ரேலியப் பிணக்கு வடஅயர்லாந்தில் கத்தோலிக்க—புரட்டஸ்தாந்திய போராட்டம்),—புரட்சிகர இடதுசாரி இயக்கத்தை இரு முரண்பட்ட 'பாவச்சோதனைகள்' இடர் செய்கின்றதைக் காணலாம். பலஸ்தீனியரின் அல்லது வடஅயர்லாந்துக் கத்தோலிக்கரின் தேசிய இயக்கத்தின் நியாயத்தை மறுப்பதே முதற்'பாவச்சோதனை': இவ்வியக்கங்களை 'குட்டிமுதலாளித்துவ' இயக்கங்கள், அவை தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துகின்றன எனக் கண்டித்து, இன மத பேதமற்று எல்லாத் தொழிலாளர்களும் ஒன்றுபடல் வேண்டுமென்ற கொள்கையைப் பிரகடனம் செய்தல். இரண்டாவது 'பாவச்சோதனை' இவ்வியக்கங்களின் தேசியவாதக் கோட்பாட்டை கண்மூடித்தனமாக ஆதரித்து, வர்க்கவேறுபாடின்றி, ஆதிக்கமுற்ற தேசிய இனத்தை (இஸ்ரேலியயூதர் அல்லதுவடஅயர்லாந்து புரட்டஸ்தாந்தர்) 'பிற்போக்குத் தேசிய இனங்கள்'—அதாவது சுயநிர்ணய உரிமை மறுக்கப்படவேண்டியதேசிய இனங்கள்—என முழு மொத்தமாக அவர்களைக் கண்டித்தல்.

இவ்விரண்டு கற்பாறைகளிலும் மோதாது பார்த்துக் கொள்வதே புரட்சிகர மார்க்சியவாதிகளை எதிர்நோக்கும்பணி. ஒவ்வொரு குறிப்பிட்ட நிலைமையையும் சுட்டிப்பாக ஆராய்ந்து உண்மையானசர்வதேச மார்க்கத்தில் செல்வதே அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறி. லெனினும் ரொட்ஸ்கியும் தலைமை தாங்கிய காலத்தில் (1919—23) 'கொமின்ரேன்' வகுத்ததேசிய இனக் கொள்கையிலிருந்தும் இரண்டாம் அகிலத்தின்காங்கிரஸ் (1896) நிறைவேற்றிய புகழ்வாய்ந்ததீர்மானத்திலிருந்தும் இந்நெறி உயிர்ப்பும்உந்துதலும்பெறும். லெனினதும் லக்ஸ்செம்பேர்க்கினதும் ஒப்புதல் என்ற அரும்பெருமையைப் பெற்ற இத்தீர்மானம் வருமாறு: ''சகல தேசிய இனங்களுக்கும் பூரண சுயநிர்ணய உரிமை உண்டு என இக் காங்கிரஸ் பிரகடனம் செய்கிறது; இராணுவ, தேசிய இன அல்லது வேறு எவ்வகையான சர்வாதிகார நுகத்தின்கீழும் தற்பொழுது துன்புற்றுக்கொண்டிருக்கும் சகல நாட்டுத் தொழிலாளர்களுக்கும் இக் காங்கிரஸ் தனது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. சர்வதேச முதலாளித்துவத்தைத் தோற்கடித்து, அனைத்துலக சமூக குடியாட்சியின் குறிக்கோள்களை எய்துவதற்கு அறிவுணர்வுவாய்க்கப் பெற்ற உலகத் தொழிலாளர் அணியில் இணைந்து அவர்களோடு தோளோடுதோள்கொடுத்து போராடுமாறு இந்நாடுகளின் தொழிலாளர்களை காங்கிரஸ் அழைக்கிறது.'' ○

(முற்றிற்று)

''ஒரு நூலினை இலக்கியம் என்று ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்று தீர்மானிப்பதற்கு, முதலில் அந்நூல் இலக்கியமா இல்லையா என்பதனை நிர்ணயித்தபின்புதான் மார்க்சியக் கோட்பாட்டினைக் கொண்டு அதனை மதிப்பிடவேண்டும்'' என ரொட்ஸ்கி 'இலக்கியமும் புரட்சியும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இலக்கியத்தினை உண்மையாகப் புரிந்து கொள்ளாத எந்த மார்க்சியவாதியும் இம்முயற்சியில் இறங்கினால், இஃது விபரீதமாகவே முடியும். மார்சியவாதமோ வேறு எந்தவாதமோ இரண்டு நூல்களைக் கலை ரீதியாக தரம்பிரிப்பதற்கு உதவமாட்டாது. கலை இலக்கியத்தின் பிறப்பிடத்தையும் அவற்றின் சமூக முக்கியத்துவத்தையும்உணர்த்துவதற்குமார்க்சியவாதம்உதவிய போதிலும் அந்தக் கோட்பாட்டை மட்டும் கொண்டு, நாம் இலக்கியத்தின் ஏற்றத்தாழ்வை நிர்ணயிக்க முடியாது.

—ஏ. ஜே. கனகரட்ண

('மார்க்சியமும் இலக்கியமும்' என்ற கட்டுரையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள்

குப்பிழான் ஐ. சண்முகன்

எதிர்பார்க்கப்பட்டது போலவே நண்பன் அறையில் இல்லை என்று தெரிந்தது. புதிதான நாயும், பழைய 'டிட்டோவும்' வாலைக் குழைத்து மகிழ்ச்சிக் குரலெழுப்பி அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன. ஏற்கனவே கொழும்பில் வேலைபார்த்த இரண்டு மூன்று வருடங்களாக அவனுக்கு 'டிட்டோ' வுடன் பழக்கம். ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு கடந்த மாதம் கொழும்புக்கு வந்தபோதுதான் புதிதான நாயுடன் பழக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவனைக் கண்டதும் வள் வள்ளென்று பாய்ந்தது அது. 'டிட்டோ'தான் சமாதானப் படுத்திற்று. அறையால் போகும் போதும் வரும்போதும் மீண்டும் மீண்டும் சிறு சிறு முனங்கல்கள். பிறகு அவனையும் தனக்குத் தெரிந்தவர் பட்டியலில் அது சேர்த்துக் கொண்டு விட்டது.

நாய்களின்குரல்களுக்கிடையில் வெளிக் கதவின் அண்மையில் நின்று கதவை தட்டலாமா என்று தயங்கிய கணத்தில், உள்ளில் கிழவிகள் கதைக்கும் சத்தம் கேட்டது. மகிழ்ச்சியுடன் கதவைத்தட்டினான். 'அறையில் போய் ஒரு wash எடுத்தவுடன் ஒரு ஐந்து நிமிடம் ஆறிவிட்டு 'மகிந்த விஜய சேகரா'வின் கூட்டத்திற்குப்போகவேணும். கூட்டம் எப்படியும் ஐந்தரை மணியளவில் முடிந்து விடும் பிறகு 'Alfie Darling' படம் பார்க்க வேணும். இப்போதே மூன்றரை மணியாகுது'

கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அப்பால் வீட்டுக்காரக் கிழவி "நீங்களோ" என்றாள். "என்னை வருமெண்டு ஸ்ரீசொல்லவில்லையோ" என்றான். "சொன்னவர் தான். அவர் இன்னமும் வேலையாலை வரவில்லையே! என்ன செய்யப் போகிறீர்கள்" என்றாள்.

அவன் தயங்கினான். ஸ்ரீயின் மேல் கோபம் வந்தது, "உதிலை சூட்கேசை வைச்சிட்டு வேணுமெண்டால் wash எடுங்கோவன். இப்ப நாலுமணிக்கு அவர் வந்திடுவார்".

மற்றக் கிழவி அவனைப் புதினமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். 'அனுதாபப் படுகிறாளா? கர்வப்படுகிறாளா?'

"நாலு மணிக்கு வந்திடுவாரா?" என்றான்.

"ஓம் நாலரை மணிக்கு வந்திடுவார்"

வெளிக் கதவில் மாட்டியிருக்கும் துணி கட்டிய—கறுத்த—அந்த மற்றத்திறப்பால் ஸ்ரீயின் அறையைத் திறக்கலாமென்றுஅவனுக்குத் தெரியுந்தான். அந்த வீட்டுக்காரக் கிழவியும் அவனை நாலைந்து வருடங்களாக அறிவாள்தான். அந்த மற்றக் கிழவிக்கும் அவன் முகம் பரிச்சயமாகித் தானிருக்கும். என்றாலும் அந்தக் கணங்களில் ஒரு இறுக்கம் இருந்தது. இந்தக் கர்வம் பிடித்தவர்களிடம் பணிய வேண்டாமென்றுபட்டது.

'எப்படி wash எடுப்பது. இரண்டு கிழட்டுச் சனியன்களுக்கு முன்னால் எப்படி உடைமாற்றுவது?'

"சும்மா உதிலை றோட்டுக்குப் போட்டு வாறேன் ஸ்ரீயும்வந்திடுவார்தானே" என்றாலும் பாதிக்கப்படாதவன் போலத்தான் சொன்னான். அந்தக் கறுத்தத் திறப்பால் ஸ்ரீயின் அறைக் கதவைத் திறககலாம்என்பதை அறியாதவன் போலத்தான் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பின்னாலேயே வெளிக் கதவுபூட் டப்பட்டது. நாய்கள் கொஞ்சத் தூரம் அவனுடன் வந்தன. 'மத்தியான றெயினி லேயே வந்திருக்கலாம்' சும்மா எரிந்து விழுந்து அவள் முகக் கறுப்பைக்காணுது தவிர்த்திருக்கலாம்'.

''கடையனுக்குப் புத்தகம் போட்ட அந்த 'ரிசீற்றுகளை எங்கேயப்பா வைச்ச னீர்''?.

''நீங்கள்தானே வைச்சனீங்கள்''

''இராத்திரியல்லே எடுத்து வைக்கச் சொன்னனான். இப்பவே ஐஞ்சே முக்காலா குது''

''பொறுங்கோ இரண்டு நிமிஷத்திலே எடுத்துத் தாறன்''

''பிறகு எந்த றெயினிலை போறது''

அவள் முகம் கறுப்பதாய் ......

அவன் அதைத் தவிர்க்கமுயல்வதாய்...

கரிபடர்ந்த இந்த முகத்துடனும்,கசங் கிய சேட்டுடனும், உடலின் அசதியுட னும் இப்படி அலைக்கழியாமல் இருந்திருக் கலாம்'.

கொழும்பு பழையபடியே தான் இருந்தாலும் ஸ்தம்பித்து இருப்பதுபோல ஒரு தோற்றம். அசையும் மனிதர்களை மறந்துவிட்டால் ஒரு ஓவியக் காட்சிபோல மங்கலொளியில் நகரம்குளித்துக் கிடந்தது.

'நல்லவேளை; இராசேஸ்வரியிலை சாப் பிடாமல் பசியோடை வந்திருந்தால் இன் னும் கஷ்டப்பட்டிருக்க வேணும்'

காலி வீதி நீண்டு தெரிந்தது.

'வடக்கே திரும்புவோமா? தெற்கே திரும்புவோமா?. வடக்கே போனுல் ஸ்டே சன் றோட்டாலை போய் ஸ்டேசனிலை ஸ்ரீ வரும்வரை காவலிருக்கலாம். தெற்கே போனல் கிருஷ்ணபிள்ளையின் ரூமுக்குப் போகலாம்'

தெற்கே திரும்பினுன். மாலை நேர மாகையால் நண்பர்களைச் சந்திக்க வேண் டிவரலாம். சந்தித்தால் சிரிக்க வேணும்; இரண்டொரு வார்த்தை கதைக்க வேண்டி நேரலாம்.சிலவேளை office வேலைகளைப்பற்றி (அந்த டீச்சரின் conversion செய் தாச்சோ; இந்த டீச்சரின் pension file க்கு என்ன நடந்தது?) விசாரிப்போர்குறுக்கிட லாம், அவர்கள் கதையை நீட்டி வளர்க் கலாம்.

'அந்தச் circular கிடைத்ததா ஐஸே'

'இந்த வேலை செய்கிற staff officer சரியில்லை,

'அந்தக் clerk உம்முடைய கூட்டாளி தானே! அவரிட்டைச் சொல்லி இதை ஒருக்காச் செய்வித்துத் தாருமன்.

'புதிதாய் வந்த Director எப்படி'?

நினைவின் அதிருப்தியிலேயே வேகமாய் நடந்தான். வலதுகாற் செருப்பு காலோடு ஒட்டாது இருப்பது போலப்பட்டது. 'செருப்புகளும் அறுந்து போச்சுது! வாங் கியும் கனகாலம் ஆச்சு. ஒரு செருப்புத் தைப்பவனிடம் கொடுத்துத் தைப்பிச்சால் நல்லது, யாழ்ப்பாணத்திலை அந்த அவசரங் களுக்கை இதுகளைக் கவனிக்க ஏலாது' மதிற் கரையில் மெழுகுசீலைப் பந்தலின்கீழ் ஒரு செருப்புத் தைப்பவன் எதிர்ப்பட்டான். சுற்றிவர பழைய செருப்புச் சப்பாத்துக் குவியல்; நடுவில் நரைத்த முகத்துடன் அவன் யாரோவொருகாற்சட்டை போட்ட வயோதிபரின் கால்களை—செருப்பைப்பார்த் துக் கொண்டிருந்தான்.

'இதிலை நிண்டு மினைக்கிடேலாது'

'இண்டைக்குச் சனிக்கிழமை, கிருஷ் ணபிள்ளையும் அறையிலை இருக்குதோ தெரி யாது. ஆள்கொட்டாஞ்சேனைக்குப்போயிருக் கக் கூடும். சும்மா போய்ப் பாக்கலா மெண்டாலும் அந்த இரண்டு மூன்றுகேற் றுக்களையுமல்லே திறந்து கொண்டுபோக வேணும்?'

அந்தக் கடையருகில் வேறோர் சப்பாத் துத் தைப்பவன். இல்லை—குடை தைப்பவன். 'இப்ப கொழும்பிலை மழை காலம்போலை; இண்டைக்குப் பின்னேரமும் மழைவரும் போலை. இப்ப நாலு மணி ஆகப் போகுது. மஹிந்த விஜயசேகராவிட்டைப் போகே லாது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்ப என்ன செய்கிறது. இப்ப இராமகிருஷ்ண மிஷனுக்குப் போய்ப் பேப்பர் பார்க்கலாம்'

மீண்டுமோர் செருப்புத் தைப்பவன். கறுத்த வாட்டசாட்டமான மனிதன். செருப்புகளைத் தைக்கக் குடுப்போமா'? மூன்று இளம் பெண்கள்; வாளிப்பானவர்கள்! மகிழ்ச்சியான முகத்தையுடையவர்கள்; சாறி கட்டியிருப்பவர்கள்; பூச்சூடியிருப்பவர்கள்; இவனை ஓரக்கண்ணால் பார்த்துச் செல்பவர்கள்.

''இனியும் செருப்புத்தைப்பவன் எதிர்ப்படுவானோ? நான் நினைக்கேலை. வழக்கம் போலவே செருப்புக்களை அப்படியே விட வேண்டியதுதான்.'

இராம கிருஷ்ண மிஷனுக்குத் திரும்பும் முடக்கில், சின்னப் பையனிடமிருந்து போத்தலில் ரீ வாங்கிக் குடிக்கும் பெரிய பையன்; பழைய செருப்புக்களை மூட்டையாகக் கட்டி ஏளம்பும் நிலையில் இருந்தான் இவனின் பார்வையைச் சந்தித்து இவனையே பார்த்தான். இவனும் சுற்றுமுற்றும் பார்த்தான், பக்கத்தில் ரிக்ஷோவில் சரிந்து இளைப்பாறும் - காத்திருக்கும் கிழவனைத் தவிர ஆள் நடமாட்டம் உறுத்தவில்லை. இரண்டுகால் செருப்புகளையும் கழற்றிப் பையன் முன் போட்டான். ''அறுந்ததுகளைப் பார்த்து ஒருக்கால் சரிபண்ணித் தாரும்'' அறுந்து தொங்கிய இரண்டொரு நூல்களையும், துருத்திக் கொண்டிருந்தசில தோல் சிலும்பல்களையும் வெட்டியவன், ஒரு தோல்வாரை மீண்டும் கெட்டியாக இணைத்துத் தைக்கத் தொடங்கினான். ''இதுக்கு ஆணி அடிச்சாத்தான் நல்லது. இப்ப ஆணியெல்லாம் சரியான விலை விக்குது ஐயா''

இவன் ஒன்றும் பேசவில்லை. வெற்றுக் கால்கள் சுட்டன. மழை பெய்யப் போவதற்கு முந்திய சாய்வு வெய்யிலில் நெற்றியிலும் கன்னத்திலும் வியர்வைமுத்துக்கள் அரும்பின. யாரோ இரண்டு பெண்கள் இவன் அருகால் சென்றது போலத் தெரிந்தது. ஒருகணத்தில் வியர்வைகலந்தபெண்ணின் மணம் இவனைக் கடந்து சென்றது.

இரண்டு செருப்புகளையும் இவன் முன்னால் தூக்கிப் போட்டுவிட்டுஏதோ தேடும் பாவனையில் இருந்தான் பையன்.

''எவ்வளவு வரும்?''

''ஒரு ஐம்பதுசதம் தாருங்கோவேன்''

''ஒரு ரூபா ஐம்பது சதமோ'' என்றவன் ஒரு ரூபாவைத் தூக்கி அவன்கையில் போட்டான். நடக்கத் தொடங்கியவன் திரும்பி அவனைப் பார்த்தபோது, அவன் சின்னவனிடம் 'இவனைப் பேயன்' என்பது போல ஏதோ சொல்ல வாயெடுத்தவன்- இவன் முகத்தைக் கண்டதும் ஒரு நொடி பயந்தவனாகி மீண்டும் பெரிதாகத் தலையாட்டி இவனுககு நன்றி தெரிவித்தான்.

'அவன் கண்களில் தெரிந்தது பயமா? மகிழ்ச்சியா? வியப்பா? ஏளனமா? அல்லது எல்லாம் கலந்த ஒன்று?

'நான் சரியான பேயன்தான்'

இராமகிருஷ்ண மிஷன் வளவில் செழித்து வளர்ந்த அசோக மரங்கள்; ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு அப்பால் இரட்டைக் கவரில் பச்சையாய்ப் படர்ந்து குவிந்திருந்தன. 'இதைப் பற்றி விசாரிக்க வேணும். எங்கடை வீட்டுக் கேற்றிற்குப் பக்கத்திலை வளர்கிற இரண்டு மரங்களையும் இது போலத்தான் வளர்க்க வேணும். அதுகள் எப்பதான் வளரப்போகுதோ'

மிஷன் வாசிகசாலையில் வழக்கம் போலவே சனக் கூட்டம். தினசரிகள் இருக்கிற நடு மேசையைச் சுற்றிலும், சஞ்சிகைகள் இருக்கிற வலதுபக்க மேசையைச் சுற்றிலும் இருப்போரும்-நிற்போருமாய்ச்சனங்கள்; காத்திருக்கின்ற சனங்கள்; ஆவலாதிப் படுகின்ற சனங்கள்; வெற்று வாய் சப்புகின்ற சனங்கள்.

சமயச்சஞ்சிகைகள் கேட்பாரற்றுக்கிடக்கும் இடது பக்கத்து மேசையின் அருகில் கதிரையில் குந்துகிறான். தர்மசக்கரம், இராம கிருஷ்ண விஜயம், ஆத்மஜோதி, தர்மசக்கரம், இராமகிருஷ்ண விஜயம், பெயர் விளங்காத சிவலிங்கத்தை மைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொண்ட வடமொழிச் சஞ்சிகை. ஒரு தர்ம சக்கரத்தை எடுத்து விரித்தான். வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பத்து விதிகள்—வாசித்தான். அருமையாக இருந்தன. 'இவற்றை நினைவில் நிறுத்த வேண்டும்; இதன் படியே நடக்க முயல வேணும்'

'நாலரை மணியாகி விட்டது'. தர்ம சக்கரத்தைப் பார்ப்பதாக பக்கங்களைத்தட்டிக் கொண்டே சுற்றிலும் நோட்டம் விட்டான். 'இதுவரை வந்ததற்கு ஏதாவதொரு தினசரியையாவது பார்க்க வேணும்; அதற்காக காத்திருக்கும் சனங்களுடன் போட்டி போடவேணும். மூர்க்கத்தனமாக ஆக்கிரமிக்க வேண்டும். மற்றவர்கள் காத்திருப்பதைக் காணாதவனைப் பாவனை செய்ய வேண்டும்.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நடுமேசைக்கு நகர்ந்து கொண்டான். 'ஹிந்து' இதழொன்றைப் புரட்டினான். விஜயலட்சுமி பண்டிட் இந்திராவுக்கு எதிராகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். வீரகேசரியின் அசைவுகளிலேயே கண் பதித்திருந்தான். எதிர்பாராமல் அவன் அருகிலேயே வந்து விழுந்தது அது. டபாரென்று ஹிந்துவைமூடி அதை எப்படி எடுப்பது அக்கறையாக ஹிந்து படிப்பதாகபாவனை பண்ணி, இயல்பாகவே அதைமூடிவைத்து விட்டு வீரகேசரியை எடுக்கவேணும்'.

பாவனை பண்ணி தயாராவதற்குள் அது மீண்டும் போய்விட்டது. அவனைப் போலவே எத்தனையோ பேர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். சுவருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் வீரகேசரி காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டிருந்தது; தலை நரைத்திருந்தது - கண்ணாடி போட்டிருந்தது; நிதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

எல்லாக் கண்களும் அதையே துளைப்பதாய்...., எல்லோரும் பொறுமை பொங்க அதையே பார்ப்பதாய்... , எல்லோரும் மனத்தில் கறுவிக் கொள்வதாய் .., எல்லோரும் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணால் வெறிப்பதாய் .,

'நானும் அபடித்தானே...'

'நாலே முக்கால் ஆகி விட்டது. ஸ்ரீவந்திருக்கக் கூடும்; அறைக்குப்போய் ஒரு சிறு குளிப்புப் போட்டுவிட்டு படம் பார்க்கப் போக வேணும். கடவுளேயென்று அதற்குள் மழை வந்திடக் கூடாது!

மனங் கேளாமல் மீண்டும் தினசரிக்காய் சுற்றும்முற்றும் பார்த்தான். மின்விசிறியின் 'விர்' சத்தம் கர்ண கடூரமாய் ஒலிக்கும் மௌனத்தில், எல்லோரும் மூர்க்கமாய் இயங்குவதாய்......, ஒருவரோடொருவர் மோதிக் கொள்ளத் தயார் ஆவதாய் ..., யாரை ஆக்கிரமிக்கலாம் என்று குறி யார்ப்பதாய்......

'நான் யாரையாதல் ஆக்கிரமித்திருக்கிறேனு? நானும், எனது இலக்குகளும்தான் பலராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது போல...:

ஆற்றாமையுடன் கிளம்பினான், ஒரு வேகம் வந்து பிடரியைப் பிடித்து உந்தித் தள்ளுவது போலப் பட்டது. நாலு ஐம்பது: நாலு ஐம்பத்தைந்து: எங்கேனும் ஒன்றாய்ப் பொட்டாக விழும் மழைத்துளி: நாலு ஐம்பத்தேழு; ஸ்ரீயின் அறையிருக்கும் ஒழுங்கைக்கான முடக்கின் திரும்பல்: வீதியின் கரையில் இருக்கும் குடும்பம்: குழிவிழுந்த கண்களை உடைய அவன்; அவனோடு முரண்டு பிடித்து அழும் மூன்று வயதுக் குழந்தை: வீதியில் படுத்திருந்து கைக்குழந்தைக்குப் பால் கொடுக்கும்அவள்; அவளின்சுறுக்கபெரியதனம்; நாலுஐம்பத்தெட்டு; வெளிக் கதவில் தட்டல்: ஐந்துமணி'.

கிழவியின் சினேகிதியே கதவைத் திறந்தாள். ''ஆள் இன்னும் வரவில்லையே! என்ன செய்யப் போகிறீர்கள்''

கறுத்தத் திறப்பை ஆவலோடு பார்த்தான். ''திறப்பைக்கொடுத்திட்டு போறேனென்று தானே எழுதினவர்''

''அவர் சொல்லிப் போட்டுத்தான் போனவர். நீங்கதான் வெளியாலைபோகப் போறேனெண்டதாலை நான் சொல்லலை. உந்தத் திறப்பை எடுத்துத் திறவுங்கோ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதுவும் திறக்குமே?'' என்று தெரியாதவனைக் கேட்டான்.

''சிலவேளை திறவாது''

கதவு உடனேயே திறந்து கொண்டது. உள்ளே நின்று அடித்துச் சாத்தினான். ஜன்னல்களை ஒலியெழும்பத் திறந்து விட்டான். உடைகளைக் களைந்தெறிந்தான். கோடுபோட்ட சிவத்தச் சாறத்தைக் கட்டிக் கொண்டு, உடம்பைத் துவாயால் மூடிகொண்டு, படாரென்று கதவைத் திறந்து, அருகருகே நின்ற இரண்டு கிழவிகளையும் உர்ரென்ற முகத்துடன் பார்த்துக் கொண்டு பாத்ரூமுக்கு விரைந்தான்.

தலையில் வார்த்த நீரின் குளிர்ச்சியில் மனத்திலும் ஒரு இதம் தொத்திக் கொண்டதுபோல ஒரு உணர்ச்சி. இரண்டு கிழவிகளும் பாவம் என்று நினைத்தான். இரண்டு கிழவிகளும் பாவமென்று மீண்டும் மீண்டும் நினைத்தான். பாத்ரூமிலிருந்து திரும்புகையில் சகஜபாவத்தில் முகத்தில் புன்முறுவல் காட்ட முயன்றான்.

நேரம் ஐந்தேகாலாகி விட்டது. 'ஐந்தரைமணிக்காதல் போல்ஏறினால்தான். ஆறு மணிக்கு முந்தித் தியேட்டரடிக்குப் போகலாம்'

கிழவிகளுக்குத் தாங்ஸ் சொல்லி வெளிக் கிளம்பினான். நாய்கள் மூலையில் ஒன்றாகப் படுத்திருந்தன. அடுக்குச் செம்பரத்தைப் பூக்களை யாரோபறித்து நிலத்தில் போட்டிருந்தார்கள். மழைக் கோலம் வலுத்திருந்தது. 'மழை வர முந்தியே தியேட்டரடிக்குப் போயிடவேணும்'

பஸ்ஸில் சனம் அதிகம் இல்லை. அலையும் கண்கள் தரிக்கக் கூடியதான வண்ணங்கள் எதுவுமில்லை. இயந்திரமாக ஓடிக் கொண்டிருக்கும் பஸ்ஸிலிருந்து கொள்ளுப் பிட்டித் தரிப்பில் இறங்கி நடக்கத் தொடங்கினான். 'மழை கட்டாயமாக வரும். படம் முடிந்து திரும்பும்போது மழை பெய்தாலும் பரவாயில்லை. ஏதாவது கட்டிடத்தில் ஒதுங்கியிருந்து தாரைதாரையாகவழியும்மழைத்தண்ணீரை மஞ்சல் வெளிச்சத்தில் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

தியேட்டரடியிலும் சனக்கூட்டமில்லை. நிலைமை அசாதாரணமானது போலப் பட்டது. 'மழை வரும்போலிருந்ததால் சனங்கள் வராதிருந்திருக்கலாம்.' ஒரேயொரு கவுண்டரில் மட்டும் 'கியூ' வாலாய் நெளிந்திருந்தது. அந்த வாலில் இவனும்தொத்தினான். இவனுக்குப் பின்னாலும் இரண்டு மூன்று பேராய்......

அது எந்தக்கிளாசுக்குரிய கியூவென்றே இவனுக்குத் தெரியவில்லை. தனக்கு முன்னால் நிற்பவர்களைக் கேட்கலாமென்றுஎண்ணினான். அதற்கான சிங்கள வார்த்தைகளை மனத்தில் கோர்த்துக் கட்டினான். கியூவின் முன்வரிசையில் சலனம். 'டிக்கற்' முடிந்துவிட்டதான செய்தி காதில் விழுந்தது. நிராசையுடன் திரும்பினான். 'இனி என்னசெய்வது? இன்றைய நாளே இப்படி அலைக்கழிப்பாய்...... இனி என்ன செய்வது?

கால்கள் கோல்பேஸ் நோக்கி நடந்தன.

பிரக்ஞை அற்றவனைப்போல, பிரக்ஞை உள்ளவனாகவே நடந்தான். எதிர்ப்பட்ட மைதானத்தில் வர்ண விளக்குகளால் காணிவெல்லின் கோலாகலம். 'இங்கு நின்றால் வர்ணங்களைப் பார்க்கலாம்தான்; எத்தனை வர்ணங்கள்? சிவப்பு, மஞ்சல், பச்சை, நீலம், ஊதா, சிவப்பில் கோடாய் மஞ்சலில் புள்ளியாய், பச்சையில் கோலமாய் வண்ணங்கள்; கண்சிமிட்டும் வண்ணங்கள் புன்னகை பூக்கும் வண்ணங்கள்; ஒயிலாய் நடக்கும் வண்ணங்கள்; தங்கச் சங்கிலியைத்தூக்கிப்பல்லால்கடிக்கும்வண்ணங்கள்; சங்குமாலை போட்டிருக்கும் வண்ணங்கள்; கனவில் ஆழ்ந்து கவிதையாகும் வண்ணங்கள்.... ஆனால் எங்கே நிற்கிறது?

அலரி மாளிகை வாசலில் துப்பாக்கியுடன் நிற்கும் பொலிஸ்காரர்கள்; தனித்து நடக்கும் இவனையேகவனிப்பதாய்; உற்றுப் பார்ப்பதாய்தங்களுக்குள் குசுகுசுப்பதாய்... இயல்பாய் நடக்க முடியவில்லை இடதுகை ஆட வலது கையை ஆட்டி நடக்க முடியவில்லை.

பெரிய ஒப்ரோய் ஹொட்டலின் தண்ணீர்த் தடாகம். புதிதாய் வளரும் மரங்கள். படபடவென்று விழத் தொடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மழைத் துளிகள். ஓடத் தொடங்கினான். நேராகவே ஓடினான். யாரோவொரு சாறக்காறனும் ஓடிவந்தான். எதிரேவந்த ஒரு கட்டிடத் தாவாரத்தில் நுழைந்து மீண்டும் மிதந்து பெருநடைபோட்டான். தெற்குநோக்கிப் போகும் பஸ்கள் தரிக்கும் ஹோல்பேஸ் பஸ் ஹோல்ற் கூடாரத்தில் நுழைந்து தங்கினான்.

மழை ஓசையெழுப் பலத்து விட்டது. கூடாரத்தில் கும்பல் கூடிவிட்டது. காதல் சார்ந்த ஒரு ஆங்கிலப் பாடலின் 'கோரஸ் குரலுடன்' ஒரு வாலிபப் பட்டாளம் கூடாரத்தில் பிரவேசித்தது. தலைவனாகத் தெரிந்த கறுத்தத் தடியன் தன் தொப்பியை நீட்டி சில்லறைகள் வாங்கத் தொடங்கினான். தயங்கியவர்களிடம் உறுமலுடன் தொப்பி அசைந்து அசைந்து இவன் முன்னால் நீண்டது. இவன் தலை அசைத்தான். "what about you" உறுமலுடன் மீண்டும் நீண்டது. இவனைப் பயம் பற்றிக் கொண்டது (அவர்கள் கும்பலாக வந்த தலை வளர்த்த கறுத்தத்தடியர்கள்) இது ஒரு கௌரவப் பிரச்சினை ஆகிறது போலவும் இவனுக்குப் பட்டது. இவனும் விட்டுக் கொடுக்காமல் (பயத்துடன் தான்) மீண்டும் தலை அசைத்தான்.

"Are you a thomian"

ஆமெனத் தலையசைத்தான், ரோயல் கல்லூரியை வாழ்த்தும் சுலோகங்களுடன் கும்பல் அப்பால் நகர்ந்தது. காற்றின் வீச்சில் மழைச் சாரல் உள்ளே தெறித்தது. மேலும் உள் நுழைந்து நின்று கொண்டான். முகங்களை வெறிக்கத் தொடங்கினான். ஆணும் பெண்ணுமான இளம் சோடி ஒன்று; அவன் அவளிடம் சொன்னான் "இந்த 'மச்சில' சென் – தோமஸ் இனிங்ஸாலை வெல்லும்"

மழையில் நனைந்தபடியே ஓடும் வாகனங்களைப் பார்த்துக் கொண்டு நின்றான். மழை நீர் வழியும் தார் வீதியில்– ஒளியைப் பரப்பிக் கொண்டு அப்படியே வழுக்கிக்கொண்டுஅவைபறக்கும்.முதலில் மஞ்சள் ஒளியாய்த் தூரத்தில் தெரியத் தொடங்கி பெரிதாகிப் பெரிதாகி பரந்து-அணமி, அவனைக் கடந்து விரைகையில் பின்னால்சிவந்த ஒளிப் பொட்டாய் நீரில் பிரதி பலித்துக் கொண்டே மறையும்.

கனவுலகம் போன்ற மயக்கில் வீதி விளக்குகளின் ஒளிப் பிரவாகம்; காலி வீதி நீட்டிற்கு ஒரே வரிசையாய் மின்னும் மஞ்சள் ஒளிப் பொட்டுகள். கண் எதிரில் வீதியில் திட்டுத் திட்டாய்த் தேங்கி நிற்கும் நீரில் மஞ்சளாய் சலனப்படும் ஒளிப் பிம்பங்கள்—நிலாத் துண்டுகள் போல; 'நினைவிருக்கிறதா? ஹரிசீனிவாசனின் நிலாத்துண்டுகள்'

மனதில் மேலோங்கும் சலிப்பு; நினைத்த தொன்றும் நிறைவேறாத சலிப்பு; இன்றைய நாள் இப்படியே அநியாயமாகி விட்டதே என்ற சலிப்பு; பகலில் பயணம் செய்து இளைப்பாறாத அசதி நேரத்திய சலிப்பு; மெலிதாய் உடம்பில் கொதிக்கும் நோய்பற்றிய சலிப்பு.

'ஏன் சலிக்க வேணும்? ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒவ்வொருஅர்த்தம் இருக்கும் தானே! அர்த்தமின்றி ஏதும் நிகழ முடியுமா? அர்த்தம் தெரியாமல் நிகழ்வதெல்லாம் அர்த்தமின்றி நிகழ்ந்ததாகி விடுமா?' வீதியில் திட்டுத் திட்டாய் தேங்கி நிற்கும் நீரில் மஞ்சலாய் சலனப்படும் ஒளிப் பிம்பங்கள் - நிலாத் துண்டுகள்போல—

'என்னையே நான் ஏமாற்ற முடியாது. தோல்விகள் தோல்விகள்தான் ; கையாலாகாத்தனங்கள்கையாலாகாத்தனங்கள்தான்'

'எப்படியும் இண்டைக்குப் படம் பார்த்தே ஆக வேண்டும். அறைக்குப் போய் ஸ்ரீயையும் கூட்டிக் கொண்டு வந்து 'செக்கண்ட்ஷோ' படம் பார்க்க வேணும்'

பள்ளத்தில் தேங்கி நின்ற மழைநீரில் கால்கள் தோயவும்பஸ்பீலியிலிருந்துவடியும் துளிகள் உடலெங்கும் தெறிக்கவும் ஓடும் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். பஸ்ஸால் இறங்குவதும், சாப்பிடுவதும், நடப்பதுவும் அரைமயக்க நிகழ்ச்சிகளாக அறைக்குமீண்டவன் அப்போதும் ஸ்ரீ திரும்பியிருக்காததைக் கண்டான்.

கிழவிகளின் பம்பலும் நாய்களின்பம்பலும் இல்லாத மழைத் தூறலின் இலேசான இரைச்சலில் மனதில் கவியும் ஒரு சோர்வில் படுக்கையில் படுத்தவன், அப்படியே உறங்கிப் போனான். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இலக்கியக்காரனும்;

பல நிலைப்பாடுகளும்;

போலி முகங்களும்.

—அ. யேசுராசா

(முற்றொடர்)

இரண்டு

'நீண்ட இடைவெளிகளில் வருகிற இலக்கியப் பத்திரிகை' என்பது 'அலை'யையே யாகும். சுமார் ஏழுமாத இடைவெளியில் இலக்: 7, 8, 9 ஆகிய இதழ்களை அனுப்பியும், பலருக்கும் போல் நினைவூட்டல் துண்டுகளை இணைத்தும் சாந்தன் சந்தாப் பணத்தை (ஏழு ரூபா) அனுப்பவில்லை. 9வது இதழை அவர் திருப்பியனுப்பியபோது (இதுவரை எமக்கு இது கிடைக்கவில்லை) தனியே அனுப்பிய கடிதத்தில் எக்காரணத்தையும் குறிப்பிடவில்லை. ''பல காரணங்களுக்காக நான் 'அலை' சந்தாதாரனாக இருக்க விரும்பவில்லை.'' என்றும் ''சந்தாதாரனாக இருக்க இயலாவிடினும் வாசகனாக இருப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை,'' என்றும் எழுதியுள்ளார். இலங்கையில் மல்லிகையும், அலையுமாக இரண்டு இலக்கிய இதழ்களே வருகின்றன. அதிலும் 'சீரியஸாக' வெளிவருவதாக பொறுப்பான இலக்கியக்காரர் பலரே பாராட்டுத் தெரிவிக்கும் 'அலை'யினை, சக இலக்கியக்காரனொருவன் சந்தா செலுத்திப் பெற மறுப்பது வேடிக்கையானது! சரி, 'வாசகனாக இருப்பது' என்பதன் அர்த்தமென்ன? 'ஓசி வாசகனாக' இருப்பது என்பதா? காசு கொடுத்துப் பிரதி வாங்கியே வாசகனாக இருப்பதென்றால் சந்தா செலுத்துவதில் (தனிப்பிரதி 1-25×6=7-50 ; சந்தா 7-00) 50 சதங்கள் இலாபமும், உடனுக்குடனேயே வீடுதேடிவரும் சௌகரியமும் இருக்கிறதே! இது சாந்தனின் பொதுஅறிவுக்குத் தட்டுப்படவில்லையா?

சாந்தனின் கடிதத்தையும், அஞ்சற் கட்டளைகளையும் பெற்றதும் 'மூன்று முத்திரைக்காசையும் அனுப்பும்' எனக் கொச்சையான அஞ்சலட்டையை நான் எழுதியதாகவும், 'போஸ்ற்காட் காசு—பத்துச் சதத்தையும் சேர்த்துத்' தான் கொடுத்ததாகவும் எழுதியிருப்பதானது பச்சைப்பொய்களாகும். இவ்வாறு அவர் தரவேயில்லை. தந்திருந்தாலும் நான் வாங்கியிருக்க மாட்டேன். சந்தா பற்றிய நினைவூட்டலுக்காக பலருக்கும் 150 அஞ்சல் அட்டைகள் வரை அனுப்பியிருக்கோம். அதில் ஒன்று போலவே இதனையும் நாம் கருதுகிறோம். தவிர 'தபாற் செலவுக்குரிய பணத்தை அனுப்ப மறந்து விட்டீர்' என்று நாகரிகமாகக் குறிப்பிட்டிருந்தேனே தவிர அவர் சொல்லுவது போல் கொச்சையாக அல்ல. தனிப்பிரதிகளைப் பெறுவதாக இருந்தால் தபாற் செலவைச் செலுத்த வேண்டிய கடப்பாடு, அப்படிப்பெறுபவருக்கு உண்டு தானே?

சாந்தனை, பின்னர் நேரில் சந்தித்தபோது சந்தாதாரனாக இருக்கவிரும்பாததற்குக் காரணம் கேட்டேன். அவர் உடனே மூன்று காரணங்களை அடுக்கினார். (அ) அவர் தந்த ஒரு சிறுகதையை நாம் பிரசுரிக்காதது. (ஆ) முகப்போவியமொன்றை நிராகரித்தது. (இ) அசோகமித்திரனின் பேட்டியைப் பிரசுரிக்காதது. அவரது சிறுகதை ஆசிரியர் குழுவிற்குத் திருப்தி அளிக்கவில்லையாதலால் பிரசுரிக்கப்படவில்லை; ஓவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் திருப்தி தரவில்லை; குறிப்பிட்ட பேட்டி தினகரனில் முன்பு வெளிவந்தது. தினகரனில் விடப்பட்ட சிறிய பகுதியினையும் சேர்த்து முழுமையாகப் பிரசுரிக்க விரும்பியிருந்தும், பக்கத்தட்டுப்பாட்டினால் முன்பு பிரசுரமாகாத விடயங்களிற்கு முன்னுரிமையளிக்க எண்ணினோம்; அதனாலேயே அது விடுபட்டது என்பதை சாந்தனுக்கு விளங்கப்படுத்தியும் அவர் திருப்தியுறவில்லை. அது ஏன் என்பது, எனக்குப் புரிகிறது. சரி! தனது படைப்புகளை- தான் தந்தவற்றைப் பிரசுரித்தால் தான் அவர் சந்தா செலுத்துவாரா? (இங்கு கணையாழி அசோகமித்திரன் பற்றிய விடயத்தை நாம் நினைவு கூரவேண்டும்) அப்படியானால் சாந்தனின் இயக்கம் முற்றிலும் சுயநலம் சார்ந்ததேயென்றாகிறது.

‘நீண்ட இடைவெளிகளில் வருகிற ஒன்று’ என்பதில் ஓர் எள்ளல் இருக்கிறது. இலகுவாக ‘அலை’ என்றோ, ‘இருதிங்கள் ஏடு’ என்றோ சொல்லியிருக்கலாம். ஆனால் வேண்டுமென்றே அவ்வாறு அவர் குறிப்பிடுகிறார். பிந்தி வருவதற்குப் பொருளாதார நெருக்கடியே பிரதான காரணம். சாந்தனைப்போல் மூன்று இதழ்களைப் பெற்றும் ஏழுமாதங்களாகச் சந்தா அனுப்பாதவர்கள் சுமார் நூறு பேர்வரை இருக்கும்போது —தனிப் பிரதிகளின் விற்பனைப்பணத்தையும் ஒழுங்காக அனுப்பி உதவாதவர்கள் இருக்கிறபோது ‘அலை’ எப்படிக் காலந்தாழ்த்தாமல் வர முடியும்? பிந்தித்தான் வரும். இதற்குச் சாந்தனைப் போன்ற ‘பொறுப்பற்ற இலக்கியக்காரரே’ முக்கிய பங்கேற்க வேண்டும். தரமான விடயங்கள் கிடைக்காமையும் ஒரு காரணம். இதற்கும் எமது இலக்கியக்காரரே பதில் சொல்ல வேண்டும். சும்மா வாயளவில் வீசி அடித்துக்கொண்டு —தமிழ்நாட்டாரைக் கிண்டல் பண்ணிக்கொண்டு—“சீரியசாக எழுத எங்க களம் இருக்கு?” என்று பாவலாப்பண்ணுகிற எமது ‘இலக்கிய மேதாவிகள்’ பலரிடமும் நாம் படைப்புகளை எதிர் பார்த்தோம்; இயன்ற வரை கேட்டும் பார்க்கிறோம். அவர்ன் தான் ஒத்துழைப்பதில்லை. வெறும் வாய்

வாடைக் காற்றே!

வாடைக் காற்றே!
நீ வருக.

வரட்சிகள் நிலவ,
சுற்றிச் சுழன்றடித்த
சோழகத்தின் பின்னே வரும்
வாடைக் காற்றே!
நீ வருக.

மணவறைப் பெண்போல்
நாணமுற்ற உன்னசைவில்
நாம் மகிழ்ந்து போகின்றோம்.

ஓங்கார வெறியோடு
எழுந்து வரும் பேரலைக்கு
கரையொதுங்கிப் போன
எம் சிறிய வள்ளங்கள்
இனி மகிழ்ந்து அலைமோதும்.

சோழகத்தின் பெருவீச்சில்
சுகமுண்ட பெருந்தொழில்கள்
வல்லமையை வடித்துவிடும்
வாடையே! எம்வசந்தமே!
வா!
இனி நாங்கள் சிலிர்த்தெழுவோம்.

கொல்லையில் போட்டிருந்த
‘குறுங்கண்’ வலையெடுப்போம்;
மண்ணிட்டிருந்த எம்
சின்னஞ் சிறு வள்ளங்களை
கடல் நோக்கி இழுத்திடுவோம்.

பேரலைகள்; பெருங்காற்று,
வீசாத நீள்கடலில்,
நாமும் மகிழ்வுடன்
நம்தொழிலை ஆற்றிடுவோம்.

மு. புஷ்பராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்சுக்காரர்களாய் மட்டுமே இவர்கள் இருக்கிறார்கள்.

மூன்று

இலக்: 7லும் 16லும் வீடுவிற்றகதை யொன்று பேசப்படுகிறது. ஏதோ 'சாந்தனை அவரது வீட்டை விற்று இலக்கிய சேவை செய்யச் சொன்னது போல்' எழுதுகிறார். அவ்வாறு யாரையும் வீடுவிற்கும்படி நான் கேட்கவில்லை. இங்கும், நடந்தவற்றைசாந்தன் திரித்துக் காட்டுகின்றார். உண்மையில்நடந்ததென்ன? 'பாலம்' ஆசிரியர் பிரகாஷிற்கு சாந்தன் இரண்டு குறுங்கதைகளை அனுப்பி வைக்க, அவர் உடனே விமானக்கடிதத்தில் அவை கிடைத்தமையைத் தெரிவித்தார். இதற்கு முன்பும் படைப்புகள்கோரிசாந்தனுக்கும் (இலங்கையில்நூறுபேர்களிற்கு வரைஅவர் கடிதம்எழுதியதாக அறிகிறேன்) விமானக் கடிதத்தைப் பிரகாஷ் எழுதியுள்ளார். இவற்றைச் சொல்லி பிரகாஷ் இவ்வளவு அக்கறை எடுத்துச் செலவுடன் தொடர்பு கொள்வதைப்'பைத்தியக்காரத்தனம்' என்ற முறையில் சாந்தன் கொச்சையாகக்கதைத்தார். பிரகாஷின் இலக்கிய ஈடுபாடு, புத்தக வெளியீடுகள், பாலம் சஞ்சிகையின் சிரமம் நிறைந்த முயற்சி என்பவற்றை அறிந்து அவர் மேல் மதிப்புக் கொண்டிருந்த எனக்கு அவ்வாறான கொச்சை எரிச்சலேமூட்டியது. அவ்வாறு சாந்தன்சொல்வது சரியல்லவென்றும், எம்மால் அவ்வாறு செய்ய முடியாவிட்டாலும் அத்தகையவர்களின் முயற்சியைமதிக்கவேண்டுமென்றும்சொன்னேன். அவர்மறுபடியும்கொச்சையாக—குறைவாகவேகதைத்தார்(இதுதான் அவரது ஹீரோத்தனம்)அப்போது ஈழத்தில் இலக்கியக்காரர் பெரிதாய்முழங்குவதையும், வசதியிருந்தும் தங்களைஇத்தகைய முயற்சிகளில்ஈடுபடுத்தாமல்—வருபனவற்றுக்குக்கூட ஒத்துழைப்பு வழங்காமலிருப்பதையும்குறிப்பிட்டு,மாறாக தமிழ்நாட்டில் இலட்சிய வேகத்துடன் பொருள் இழப்பிற்கும், சிரமங்களிற்கும் தயாராயிருந்த பலரைக் காணலாமென்றும் சொல்லிஉதாரணத்திற்கு சி. சு. செல்லப்பா தனதுவீட்டைவிற்ற15,000 ரூபாவுடன் 'எழுத்து'ப்பிரசுரமுயற்சியைத்தொடங்கியதைத் தெரிவித்தேன். 'எழுத்து' போன்றபொது முயற்சிகளுடன்—பலரும்பங்கேற்கிற—புதிய பலபோக்குகளை அறிமுகப்படுத்தி வளர்க்க முயன்றமுயற்சிகளுடன் சாந்தன்சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டதையோ. அல்லது நான் சிறுகதைத் தொகுப்பைவெளியிட்டதையோ ஒப்பிடமுடியாதென்றும், ஏனெனில் எங்கள் இருவரின் முயற்சிகளில்சிறிது தன்னலங்கலந்திருக்கிறதென்றும்,'எழுத்து' முயற்சியில் அதை மீறிநிற்கும் 'பொதுஅக்கறை' உள்ளதென்றும் வற்புறுத்தினேன். சாந்தன் குறிப்பிடும் வீட்டை விற்கும் கதையோ, தான்கட்டடக்கலைஞன் என்பதால் அத்தகைய வீட்டைவிற்க முடியாது என்று இன்று சொல்வதோ அன்றுகதைக்கப்படவில்லை. இன்று, சாந்தன்வசதியாக 'புதியனபல' கண்டுபிடிக்கும் கண்டுபிடிப்பாளராக மாறுகிறார்!

16ம் இலக்கத்தில்பேசப்படுவதும் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. 'மஹாகவி'யைத் திட்டமிட்டு இருட்டடிப்புச்செய்த கைலாசபதி, உம்மைச் சிலாகித்தாரென்றால்,அதற்கு நீர் சந்தோஷப்படுகிறீரா?' என்று நான்கேட்டதுபோல் சாந்தன் சொல்லுகிறார் 'மஹாகவியை இருட்டடிப்புச்செய்ததால்அவர் உம்மைப் பாராட்டினாலும், நீர் சந்தோஷப்படக்கூடாது' என்ற வேறுபட்ட தொனி அதில் வெளிக்காட்டப்படுகிறது. உண்மையில் எந்தப் பின்னணியில், என்ன கதைக்கப்பட்டது? என்பதை நாம் பார்க்கவேண்டும். 1976ம் ஆண்டில் (எந்தமாதம்என்பது ஞாபகமில்லை) கைலாசபதி சாந்தனையாழ்ப்பாணத்தில் எங்கோ தற்செயலாக சந்தித்தபோது, அவரது 'கடுகு' குறுங்கதைத் தொகுதியை நன்கு பாராட்டியதாகவும், கடிதம் எழுத விரும்பியும் வேலைகளுக்கிடையில் மறந்து போனதாகச் சொன்னதாகவும் 'வலு சந்தோஷத்துடன்,' சாந்தன் எனக்கு வந்துசொன்னார். கைலாசபதியைப் பற்றியசாந்தனின் கருத்து நன்கு தெரிந்திருந்தபடியால், அவரது சந்தோஷம் எனக்கு ஆச்சரியத்தை எழுப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் அதுபற்றி அன்று நான் கேள்வியெழுப்பவில்லை. 1977 ஆரம்பமளவில் இலக்கிய நண்பர்கள் பலருடன் சாந்தன் சம்பந்தங் கொண்ட பலவற்றைப் பற்றி — சாந்தனின் நிலைப்பாடுபற்றி விரிவாகக் கதைக்க வேண்டி வந்தபோது இது பற்றியும் நினைவுவரக், கதைத்தேன். கைலாசபதியின் விமர்சன முறையில் சாந்தனுக்கு உடன்பாடில்லை. அவர் சில சூத்திரங்களை வைத்து அளந்து பார்ப்பதுபோல் படைப்புகளை மதிப்பிடுவதாகவும், தன்னோடு நிற்கிற - தங்கள் அணியைச் சேர்ந்தவர்களை உயர்த்தியும், மற்றவர்களை — ஆற்றலுள்ள பலரையே ஒதுக்கித் தள்ளுவதாகவும்கருத்துக் கொண்டு எரிச்சல் மிகக், கொண்டிருந்தார். இக்கருத்துக்கள் பலவற்றில் உண்மையுண்டு. இன்று முற்போக்குஅணியைச் சேர்ந்த பலரே இக்குறைபாடுகளை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி — அவசரக் குறிப்புகள்' என்ற கட்டுரைத் தொடரில் மு. தளையசிங்கம் ''எத்தனை திறமான எழுத்தாளர்கள் முற்போக்குக் கூட்டுக்கு வெளியே இருந்தார்கள்; இருக்கிறார்கள். அவர்களை அது எழுத்தாளர்களென்றுஏற்றுக்கொண்டிருக்கிறதா?'' என்று (1964) எழுதியுள்ளதிலும் இத்தகைய புறக்கணிப்பு பேசப்படுகிறது. 'முற்போககுக் கூடு' என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும் முக்கிய விமர்சனத் தலைமை கொடுத்து நின்ற கைலாசபதி போன்றோரையே இது குறிக்கிறது. மஹாகவிக்குரிய இடங்கூடவழங்கப்படவில்லை. மூன்று வருடங்களின் முன்னர் தமிழ்நாட்டில் வெளிவந்த 'தோணி வருகிறது' புதுக்கவிதைத் தொகுதி முன்னுரையிற்கூட 'ஈழத்துக் கவிதையில் பேச்சோசைப் பண்பைக் கையாண்டவர்களாக' முருகையன், எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம் போன்றவர்களைக் குறிப்பிடும் கைலாசபதியவர்கள் இவர்களிலும்முக்கியமான — இவர்களே பேச்சோசைப் பண்பை பிரதானபண்பாக முதலிற் கையாண்டவரெனக் கூறும் — மஹாகவியின் பெயரைமட்டும், வசதியாக மறந்து போயுள்ளார். இத்தகைய கைலாசபதி பற்றிச் சாந்தன் கொண்டிருந்தகருத்துக்களினால்தான் 'புதிய முதலைகள்' என்ற தனதுசிறுகதையில் ஒருபோலிவிமர்சகரையே அவர் உருவாக்கினார். அது கைலாசபதியையே குறிப்பிடுவதாக தனிப்பட்ட கதைப்புகளில் முன்பு சாந்தன் சொல்லியுள்ளார். இத்தகைய கைலாசபதி தனது புத்தகத்தைப்பாராட்டினால், சாந்தன் எப்படிப் புளகாங்கிதமுறமுடியும்? - அதனைச் சாதாரணமாக அல்லவா எடுத்திருக்கவேண்டும்? இது முரண்பாடானது என்பதைச் சாந்தனுடன் கதைத்தேன் ஆனால் மற்றவர்களை விமர்சிக்கையில்கைலாசபதியின்மேல் எரிச்சலுறும்சாந்தன் அவர் தன்னைப்பாராட்டியதும் மெய்மறந்து சந்தோஷமுறுமளவிற்கு பிரக்ஞையற்றவராவதோடு''தன்னைப்பாராட்டினால் எந்த மனிசனும் சந்தோஷப் படுவான் ஏனோ?'' என்றும் எதிர்க் கேள்வி கேட்கிறார்! நல்ல ந்யாயம் ஐயா!

நான்கு

இலக் 15ல் 'அந்த ஆள்முந்தி உனக்குப் பல அநியாயங்கள் செய்தாரே அப்பஎப்பிடி நீங்கள் உறவாயிருக்கமுடியும்?' என்பதில் டொமினிக் ஜீவா, சாந்தன், நான் சம்பந்தப்படுகிறோம். அபிப்பிராய பேதங்களுள்ளவர்களோடு, கோபத்துடன் முகத்தைச் சுருக்கிக் கொண்டு 'உறவுகளை வெட்டிக்கொள்ள வேண்டும்' என யாரையும் நான் எதிர்பார்க்கவில்லை. தேவை வரும் போது டொமினிக் ஜீவாவுடன் நானும் கதைத்துக் கொண்டும், மல்லிகை அலுவலகத்துக்குச் சென்று கொண்டும்தானிருக்கிறேன் ஆனால் 'தானே பல் வேறு விஷயங்களில் எரிச்சலுற்றுக் கொண்டிருக்கும் ஒருவருடன், தனக்கு பல சந்தர்ப்பங்களில் இடைஞ்சல்செய்திருக்கின்றஒருவருடன், தன்னைஇரட்டை வேஷக்காரன் என்பதுபோல் மல்லிகையில் அம்பலப்படுத்தியிருக்கும் ஒருவருடன்—அதுபற்றித் தனது கருத்தக்களை அழுத்தமாக வைப்பதை வசதியாக மறந்து, (கதைத்தால் ஜீவா ஆவேசப் படுவாரே!) அவர்தரும் வசதியான பிரசுர களத்திற்காகத் தான் குனிந்து போவதான உறவையே கேள்விக்கிடமாக்கி நான் கதைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ன் பிற்பகுதியில் 'கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தினரின் (நானும் சாந்தனும் அதில் உறுப்பினர்கள்) சிறுகதைத் தொகுப்பொன்றை டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை பதிப்பகம்' என்பதற்கூடாக வெளியிடுவது பற்றிய பிரச்சினையில், அபிப்பிராயபேதங்கள் எழுந்தன. சாந்தனும், நானும் சேர்ந்து ஒரு பக்கத்தில் நின்று அதனைவற்புறுத்தியதால் ஜீவா எங்கள் மேல் அதிருப்தியுற்றிருந்தார். பிழையான தகவல்கள் பல அவருக்குக் கொடுக்கப்பட்டதாகவும் பின்னர் அறிந்தோம். 1969 செப்ரெம்பரிலிருந்து எனது இரண்டு சிறு கதைகளும், இரண்டு புதுக் கவிதைகளும், ஏழெட்டுக் கட்டுரைகளும் மல்லிகையில் வெளிவந்திருந்தும் இச் சம்பவத்தின் பின் நான் அனுப்பிய ஒன்றும் 1972 ஓகஸ்ற் வரை பிரசுரிக்கப்படவில்லை. என் மீதுள்ள எரிச்சலினால்தான் ஜீவா அவ்வாறு நடந்து கொண்டார். 1972 செப்ரெம்பர் இதழில் என்னுடைய கவிதை யொன்றை வெளியிட்டதற்குக்கூட சுவையான கதையொன்றுண்டு. சாந்தனின் விடயமொன்று (என் நண்பன் பெயர் நாணயக்காரா—சிறுகதை) முதன் முதலாக மல்லிகையில் இதே இதழிலேயே வெளிவந்தது. இதற்கு முன்புள்ள காலங்களில் சாந்தன், எஸ். பொன்னுத்துரையுடன் ஒட்டிக் கொண்டிருந்தார். அதனால் 'இளம்பிறையில்' சிறு கதை கட்டுரையென்பன வெளிவந்தன. கண்டியில் நடந்த பாரதி விழாவிற்கு எஸ். பொ. தனக்குப் பதிலாகச் சாந்தனையே அனுப்பிவைத்தார். எஸ். பொ, டொமினிக் ஜீவா எம். ஏ. ரஃமான், ஆ. குருசாமி, கலை இலக்கிய நண்பர்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்ட சூடான இலக்கியச் சந்திப்பொன்றைப்பற்றிய சாந்தனின் கட்டுரை 1971 ஜனவரி இளம்பிறையில் வெளிவந்துள்ளது. (இக் கட்டுரை முதலில் மல்லிகைக்குப் பிரசுரத்திற்கு அனுப்பப்பட்டும், பிரசுரிக்கப்படவில்லை) அதில் ஓர் இடத்தில் "... ... இக்கேள்வி ஜீவாவுடைய சத்தியத்தின் தளத்தினைச் சந்தேகிப்பதாக இருந்தும், அவர் பதில் திருப்தி தரவில்லை. தனக்காக அல்லாமல், இலக்கிய நயத்திற்காகவும் அல்லாமல்வேறுஏதோஒருகொள்கைக்காக அந்த ஒன்றை மட்டும் விளக்கத் தவறி — ஜீவா பேசிமுடித்தார்" என்று குறிப்பிடுகிறார். அந்தக் காலங்களில் ஜீவாவைப்பற்றிஅவர் கொண்டிருந்த கருத்துகளின் தொனியை ஓரளவிற்கு இங்கு காணலாம். 1972 செப்ரெம்பரின் முன்னுள்ள காலத்தில் மொஸ்கோசார்புக் கொம்யூனிஸ்ற்கட்சியினரால் வெளியிடப்பட்ட 'புதுயுகம்' என்ற வாரப்பத்திரிகையில் சாந்தனின் சிறுகதை யொன்று வரஇருந்தபோது, "சாந்தன்எங்கடை ஆளல்ல" என டொமினிக் ஜீவா தலையிட்டு அதனை நிறுத்தி விட்டதாகவும் சாந்தன் என்னிடம் சொல்லியுள்ளார். 1972 ஓகஸ்ற் அளவில் சாந்தனின் குரல் மாறுகிறது. "நான் நடிக்கப் போறன். முற்போக்குக்காரரைப் போலவும் எழுத ஏலும்" என்று சொல்லுகிறார். மாவை நித்தியானந்தன், ஐ. சண்முகன், நான் ஆகியோருக்கு (கலை இலக்கிய நண்பர் கழக உறுப்பினர்கள்)இது தெரியும். "ஜீவாவைச் சந்தித்ததாகவும், அவர் ஒரு குழந்தைப் பிள்ளையென்றும், மல்லிகைக்கு எழுதும்படி சொன்னார்" என்றும் கூறுகிறார். இதன் தொடர்ச்சியாக 1972 செப்ரெம்பரில் அவரது சிறுகதை வந்ததிலிருந்து, அடுத்தடுத்து மல்லிகையில் பல சிறுகதைகள்வெளிவந்தன. ஜீவா திடீரென எப்படி சாந்தனுக்கு இடங்கொடுத்தார்? அதன் உள்நோக்கமென்ன என்பது எனக்கு விளங்கவில்லை. 1975 ஜனவரி மல்லிகையில் வந்த 'அந்நியமான உண்மைகள்' என்ற சாந்தனின் சிறுகதை வகுப்புவாதக் கதையெனப் பலராலும் தாக்கப்பட்டது. மல்லிகைக்குப் பல கடிதங்கள் வந்தன, உடனே ஜீவா பெப்ரவரி இதழில் "... ... சில கருத்துக்கள் மல்லிகையின் பொதுநோக்குக்கு ஒத்துவராதபோதிலும் கூட, சிலசந்தர்ப்பங்களில்சிலதை வெளியிடவேண்டிய தேவை பத்திரிகைகளுக்கு ஏற்படுவதுண்டு. அப்படியொரு தேவையை ஒட்டியே அக்கதைபிரசுரிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டு அத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

M/S. RAJASINGHAM INDUSTRIES.

(General Hardware Merchants & Government Suppliers)

Manufacturer's of :

G. I. Bolts & Nuts — M. S. Bolts & Nuts — Crank 'L' Bolts & Nuts Hook 'J' Bolts & Nuts — Washers — G. I. Tanks — Iron and Tyre Wheel Barrows — Wheel Valves — Gate Valves — Stop Tap — Brass Bronze and Copper Rods — Iron Gates — Steel Racks — Brass Couplings — Foot Valves etc.

Shop No. 23, Guarry Road — Colombo 12.
Office No. 105, Messenger Street, Colombo 12.
Worksite: 414/10A. K. Cyril C. Perera Mawatha, Colombo 13.
Telephone No. 35680.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையை "......தேசிய ஒருமைப்பாட்டை அவர் புரிந்து கொண்டுள்ள விதத்தை மல்லிகை வாசகர்களுக்கு சிருஷ்டிபூர்வமாக விளங்கப் படுத்தவே, அக் கதை பிரசுரிக்கப் பட்டுள்ளது. இலக்கிய உலகில் நமக்குப் பல அனுபவங்கள் உண்டு. ஒன்றை மாத்திரம் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். முற்போக்கு எனக் காலத்துக்குத் தகுந்தமாதிரிப் பேசுவதெல்லாம் -எழுதுவதெல்லாம்—முற்போக்கல்ல" என்றும், சாந்தனை அம்பலப்படுத்தவே அதைப் பிரசுரித்த தொனியில், எழுதினார். இதே வேளையில் வந்த 'களனி' இதழில் (தை—பங்குனி 1975) 'சாந்தனின் வகுப்புவாதமும், மல்லிகையின் சந்தர்ப்பவாதமும்' என்ற கட்டுரையும் வந்திருந்தது. ஆனால் சாந்தன் இவற்றுக்குப் பதிலளிக்கவேயில்லை. மல்லிகை ஏதாவது பதிலை பிரசுரிக்கமறுத்திருந்தால் சுயமரியாதையோ, தார்மீகக் கோபமோ உள்ளவராக இருக்கும் பட்சத்தில் மல்லிகைத் தொடர்பை உதறியிருக்க வேண்டும்; அல்லது அதை அம்பலப்படுத்தியிருக்க வேண்டும்; ஆனால்மாறாகஉறவையே வளர்த்துக் கொண்டார். சுயமரியாதையை விட, 'வசதியானதொரு பிரசுரகளத்தை இழக்கக் கூடாதென்பதே' அவருக்கு முக்கியமாகப் படுகிறது! மறுபடியும் 1976 செப்ரெம்பர்—ஒக்ரோபர் அளவில் சாஹித்திய மண்டலப் பரிசு தொடர்பாகச் சாந்தன் ஐயங் கொண்டிருந்தகாலத்தில், லெ. முருகபூபதி தொடர்பான ஒரு கதைப்பில் (தனது 'ஒரே ஒரு ஊரிலே ....' சிறுகதைத் தொகுப்பில்மேலதிகப்பிரதிகளை அச்சகத்தில் எடுத்துமுருகபூபதிவிற்பனை செய்தாரென்பது சாந்தனின்குற்றச்சாட்டு. இதுபற்றி'அலை' யிலும் ஒருகுறிப்புவந்தது.பின்னர் இதுபற்றியசாந்தனின் கதைப்புகளில் முரண்பாடுகளைஅவதானித்தநாம், தீரவிசாரித்தபோது அக்குற்றச்சாட்டு தவறானது என்ற முடிவுக்கு வந்தோம்; முருகபூபதியிடம் எமது கவலையைத் தெரிவித்து மன்னிப்பும்கேட்டுக்கொண்டோம்)சாந்தனும், ஜீவாவும் மோசமாகத் தாக்கப்பட்டுக் கொண்டார்கள். கதை சாந்தனின் முற்காலத் தனிப்பட்ட வாழ்க்கைவரை சென்றதில் மனம் உடைந்தவராய், எல்லாவற்றையும் என்னிடம் வந்துசொல்லிவிட்டு "இனியும் நான் மல்லிகையில் எழுதலாமா?" என கேட்டபோது, "அது உமது சொந்தவிஷயம்" என மெல்லிய எரிச்சலுடன் நான் பதில் சொன்னேன். அதன்பிறகும்கூடமல்லிகைக் களத்தைச், சாந்தன் நன்கு பயன்படுத்தினார்; அதற்குத் தனது மனவிரிவே காரணமென்றும் சொல்லுகிறார். (இந்தமனவிரிவைகட்டுரையில்தானநக்கலடிக்கும்நீண்டகாலஇலக்கிய நண்பர்களுக்கும் ஏன் காட்டக்கூடாது?)இச் சரணாகதிக்கும்,மனவிரிவிற்கும்வித்தியாசமுண்டு. ஆனால், எப்பொழுதும் அவருக்கு அத்தகைய 'வசதிகளே' பெரிதாய்த் திருப்தி அளிப்பன! இத்தகைய மோசமான, முரண்பாடான உறவு நிலைகளை என்னால் பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டதேயல்லாமல், தனிப்பட்ட மன்சுருக்கங்களை அழுத்தி நான் கதைக்கவில்லை.

ஐந்து

'கோமாளிகள்' பற்றிய குறிப்பிலும் சாந்தன் திரிபுபடுத்துகிறார் அவருடன் நான் கதைத்தது கோமாளிகள் திரைப்படம்பற்றியே தவிர, வானொலி நாடகத்தைப்பற்றியல்ல; ஒட்டுமொத்தமாக அவருக்கு அது திருப்தியளித்ததே தவிர இப்பொழுது சொல்வது போல் "சில அம்சங்கள்" மட்டுமல்ல. சாந்தன், ஏ. ஜே. கனகரத்தின, செம்பியன் செல்வன், நான் ஆகியோர் கனக செந்திநாதனைச்சந்தித்துத் திரும்பிய போது, இது நடந்தது. சரி, மலையாளப் படங்களை மட்டுந்தான் நான் இரசிப்பதாக எப்போது சொன்னேன்? கலைத்தரமிக்கசெக்கோசிலவேக்கிய,பிரான்சிய,ரஷ்ய போலந்து,வங்காள,சிங்களப் படங்களிலும் தான்எமக்கு மிக்க ஈடுபாடும், பரிச்சயமும் உண்டு;'பொன்மணி' போன்ற படங்களின் சிறப்பம்சங்களையும்தான் இரசிக்கமுடிகிறது. சாந்தன் 'கோமாளிகளுடன்' சேர்ந்து நிற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றால் தாராளமாக நின்று கொண்டிருக்கட்டும்! நண்பர் நுஃமான் ஒருமுறை சொன்னார் ''கோமாளிகளால், கோமாளிகளுக்கென்றே எடுக்கப்பட்ட கோமாளிப் படம் தான் அது'' என்று. சரி, இலங்கைக்குவந்த மலையாளப்படங்களில் 'கோமாளிகளை' விடத் தரங்குறைந்த, ஒன்றைக்கூடச் சாந்தனால் சுட்டிக்காட்ட முடியுமா?

'வித்தியாசமான தோற்றத்துடன் தெரிந்த கட்டடத்தை' (எனது சொந்த ஊரான குருநகர்வீடமைப்புத்திட்டத்தின் தண்ணீர்த் தாங்கியை—இங்கும் கதைக்கப்பட்டதுவேறொன்று) நான் தெரியாதென்று சொன்னதாக (சூழல் பற்றிய அறியாமை உள்ளவனாக என்னைக் காட்டுவதற்காக) மிகக்குழந்தைத் தனமான பொய்யொன்றையும், சாந்தன் சொல்கிறார். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு, அவ்விடத்திலுள்ள ஏழுவயதுக் குழந்தையிடம் கேட்டால்கூடச்சொல்லுமே 'தண்ணீர்த் தாங்கி'யென. என்றாலும், 'மல்லிகை' வாசகர்களின் பொதுஅறிவைச், சாந்தன் இவ்வளவு மட்டமாகக் கருதியிருக்கக் கூடாது!

வெளியீட்டுவிழாவில் தன்னிடம்சொல்லிவிட்டு, புத்தகம் வாங்கிச் சென்ற எஸ். ராஜகோபாலன் என்ற தன் நண்பன் (கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழக உறுப்பினர்) ஒருமாதமாகியும் 'நாலுரூபாக் காசு' தரவில்லை என்பதற்காக அவரது கந்தோர்வரை சென்று, சாந்தன் குரூரமாக நடந்தகதைகழகநண்பர்களுக்குத்தெரியும். அந்தநண்பனைப்பற்றிக்குறிப்பிடும்சாந்தன் இதே புத்தகக்காசு தொடர்பாக தான் அதிருப்தியுற்றிருந்த ஒரு 'கலாநிதி விமர்சகர்' பற்றியும், 'கல்வித்திணைக்கள உயர் அதிகாரி'பற்றியும் ஏன் கூறவில்லை? அவர்கள்' பெரியவர்கள் என்பதாலா? அவர்களால் பிற்பாடு ஏதும்இலாபங்கள் கிடைக்கக்கூடுமென எண்ணியிருப்பார் போலும்! ஒருமாதத்திற்குள் தனது புத்தகக் காசுவரவில்லையென்பதற்காகக் கோபப்படும் இதே சாந்தன், 'அலை'க்கு அனுப்பியிருக்கவேண்டிய பணத்தை ஏழுமாதங்களாகத் தாமதித்ததை, நாம் யாரிடம்சொல்லிக் கோபப்படுவது?

சைக்கிள் வால்வைப் போடத் தெரியாத சம்பவம் எந்த இலக்கியக்காரனுக்கும் நடந்திருக்குமென நான் நம்பவில்லை. அப்படி நடந்திருந்தாலும் அது தற்செயல் நிகழ்வாகத்தான் இருந்திருக்கும் இதையெல்லாம் பெரிதுபடுத்துகிறாரே, பெரிய பூனைக்கும் சின்னப் பூனைக்குமாக யன்னலில் இரண்டு ஓட்டைகள்வைத்த 'நியூட்டனின்' கதை சாந்தனுக்குத் தெரியாதா? அது தான் தெரிந்திருக்கவில்லையென்றால் குளியல் தொட்டியிலிருந்து, நிர்வாணமாக எழுந்து தெருவில் ஓடிய 'ஆர்க்கிமிடிசின்' கதையும் கூடவா தெரியாது! சாந்தன் என்ற 'ஞானவானின்' பார்வையில் இவர்களும் கையாலாகாதவர்கள் தானா?

''ஒரு சைக்கிள் தடிக்கு (அதென்ன சைக்கிள் தடி?) வால்ரியூப் போடத் தெரியாதவர்கள்'';''ஊரிலுள்ள கட்டடம்என்னவென்றே தெரியாதவர்'';''வாய்விட்டுச் சிரிக்கத் தெரியாத—வயிற்றுவலிக்காரன் மாதிரி முகத்தை வைத்திருக்கிற இலக்கியக்காரர்'';''இலக்கிய உலகின் கள்ளக் குடியேற்றக்காரர்கள்''; ''பேய்ப்பிராமணி'' என்ற ஏனைத் தொடர்கள் (இரண்டு தடவைகளில்—'அது, வேறு சங்கதி!' எனச் சாதி உணர்வுக்கெதிராகச்சிறுகதைபண்ணும் அதேசாந்தனேதான்!)'ஒரு லக்ஸ்பிரேயினைவிட வீட்டுக்குவந்த இலக்கிய நண்பனின் வருகையைக் குறைவாகக் கருதுதல்' என்பதெல்லாம், தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு கொண்டுள்ள பல்வேறு நண்பர்களின் மனத்தை எவ்வளவு பாதிக்குமென்பது, "எறும்பின் சாவும் தன்னைப்பாதிப்பதாகச்" சொல்லும் சாந்தனுக்கு—'பாதையில் கிடக்கும் பூவைக்கூட மிதிக்கக் கூடாது' என்று அக்கறைப்படும் சாந்தனுக்கு ('பலவீனம்' என்ற கடுகுக் கதையில்) தெரிந்திருக்க வேண்டும். தெரியவில்லையென்றால் அதெல்லாம் 'வெறும் கதை பண்ணும் வெவகாரங்கள்தானா?', வாழ்விலிருந்து கலை தனிப்பிரிந்திருக்கமுடியாதென்பதும், வாழ்க்கையே கலையாக மாறவேண்டுமென்பதும் வளர்ந்துவரும் காலம் இது என்பதை,'கம்பஇராமாயணம் முதல்கல்குலஸ் வரை'தெரிந்ததாகச் சொல்லும் சாந்தன் இனிமேலாவது தெரிந்து கொள்வது, நல்லது!

"......வியாபாரமனப்பான்மை பெருகிவிட்ட சூழலில், அறிவு எதிர்ப்புவாதம் ஆட்சிசெலுத்தும் சூழலில், கலையைத் தன் வாழ்க்கையின் தரிசன உண்மை எனக் காணாது, அது விற்பனைக்கு வைக்கப்படும் எழுத்துத் தொழில் திறனேயாகுமென்றும், தன் வாழ்க்கைக்கும் இத் தொழில் திறனுக்கும் சம்பந்தமில்லையென்றும் ஓர் சந்தர்ப்பவாதக்கொள்கை கொளுவீற்றிருக்கும் சூழலில்—இலக்கியமோ, கலையோ பிறக்க முடியாது. இன்றைய சமூக, இலக்கிய சூழல்களில் தோன்றியுள்ள இத் துர்நாற்றங்கள், துர்நாற்றங்கள்தான் என உணரப்படவேண்டும். கலை என்பது சத்தியத்தின் விகசிப்பு என்பதும், கலைஞன் ஓர் சத்தியதரிசி என்பதும் ஆன உண்மைகள் உணரப்படவேண்டும்."

—வெ. சாமிநாதன்

(இலக்கிய ஊழல்கள்—பக் 61)

'போலி முகங்கள்' என்ற பிரயோகம்—

நன்றி: 'பிரக்ஞை' (தமிழ்நாடு) ○

வெட்டிப் பேச்சு வீரர்கள்!

—சி. சிவசேகரம்

காற்றுக் கனைப்புடனே கொட்டாவி விட்டபடி—
நெட்டைப் பனைவிரலை நெட்டி முறித்தபடி—
சில்வண்டு சூள்கொட்டிச் சலிப்பை உரைத்தபடி—

திண்ணையிலே பாய்விரித்துத் தெருவோரம் உட்கார்ந்து
அண்டை அயல்முதலாய் அந்தரத்து வெளிவரையும்
அலசிப் புதினமெதும் இல்லாக்கால் உண்டாக்கிக்
கண்டதுபோற் கதைபேசிக் கால்காலைத் தின்றபடி—

விண்தொலைவின் வெற்றிடமும் பெருமூச்சு விட்டபடி!

நெல்

முளைத்து எழுந்து தளிர்த்து வளர்ந்து
செழித்து வளைந்து சரிந்து விழுந்து
இறந்து கிடந்த நெல்லின் தலையில்

இருந்தன காளைய பரம்பரை நூறு! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவும் விரிவும்

மு-புஷ்பராஜன்

கோடைசற்று விலகிநின்று
கையை யசைத்த அந்தமாலை.
வேலை செய்த களைப்பு நீங்க
வீட்டில்—
குளித்துவிட்டுக், குந்தியிருந்தேன்.

வானிலோ!
வாரிப்படர்ந்த வெண்மேகத்தி னிடையில்
வைரப் பொடிசூழ
வட்ட நிலவு.

பூமியின் புழுதி மேனியெங்கும்
பொட்டுப் பொட்டாய்
நிலவீந்த நிழல் மரங்கள்.

யோக நிலையில் செறிந்த ஒளியிடை
வாசலில் நின்ற வாழை மரங்கள்
சோகமாய் தலையை தூங்கியசைக்க
அதற்கு `மப்பால்
'வாதநாணியோ'
வெடித்த சிரிப்பொடு சிலிர்த்து நின்றன.

இந்த எழிலின் இயற்கை நடுவே
இடைக்கிடை,
இலைகள் சரசரக்க எழுந்த காற்று
குளித்துவிட்டுக் குந்தியிருந்த
என்னைத் தொட்டு,
இதமாய் செல்ல,
என்னுள் நானே
மெல்ல மெல்லக், கரைதல் கண்டேன்,

மெல்ல மெல்லக் கரைந்து நிற்க
சொல்லில் விரியாச் சுகம்.
சூழலெங்கும்—
சூழ்ந்திருந்த கவிதைச் சுகமெலாம்
எந்தன் சிரசுள் இதமா யிறங்க
நானே
கவிதையாகச் செறித்து பரந்தேன்! ★

● ''எழுத்தென்பது வர்த்தக இலக்கியமென்றும், யதார்த்த இலக்கியமென்றும் உருவாகிறது. வர்த்தக இலக்கியத்தில் விமர்சனத் தாக்கமோ, சமுதாயநுண்உணர்வோ, பிரதிபலிப்போ காணக்கிடையாது.

யதார்த்த இலக்கியமான சிருஷ்டி இலக்கியமோ ஆற்றலும் அனுபவமும்உள்ள படைப்பாளர்களால் ஆக்கப்படுகின்றன. புறத்தூண்டுதலால் அனுபவத் துணைகொண்டு ஏற்படுகின்ற ஒரு வடிவமேஎழுத்தாகும். எழுத்தாளன் தனியாள் தாக்கமாகவும் சமூகத்தாக்கமாகவும் செயல்பட்டு அதனைப் பிரதிபலிக்கிறன். தன்சூழல், அனுபவம் ஆகியவற்றால் தூண்டப்பட்டு தன் மனஉணர்வுகளையும்சிந்தனைகளையும் கோரிக்கையை முன்வைக்காது எழுத்தாளன் எடுத்துக்காட்டுவது, தனியாள் தாக்கமாகும். இது மறைமுக இயக்கமென்று கூறப்படும். சமூகத்தின் பிரச்சினைகள், நெருக்கடிகள், போராட்டங்கள் ஆகியவற்றை மாற்றங்களை நோக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் படைப்பது சமூகத்தாக்கமாகும். இது நடைமுறை இயக்கமெனக் கூறப்படும். எழுத்தாளனுக்கு ஒரு தத்துவம், அனுபவம், கொள்கையுண்டு. யதார்த்த உயிர்ப்புடன்சிருஷ்டி வடிவம்பெறுவதற்கு இதுஅவசியமாகும். சமூகத்திற்குரித்தான போராட்டம், பிரச்சினை, மாற்றங்களை மட்டும் தான் எழுதவேண்டு மென்றில்லாமல் எழுத்தாளன், மறைமுக இயக்க தனியாளாகவும் நின்று எழுதலாம். எழுத்தென்பது சுதந்திரமான பிரக்ஞை''

—சண்முகம் சிவலிங்கம் ('எழுத்தும் இயக்கமும்' என்ற தலைப்பிலான சொற்பொழிவில்)

● ''கலையின்உலகம் சித்தாந்தத்தின் சதுரங்களுக்குள் அடங்குவதில்லை''

...சச்சிதானந்தன்
('கலையும் மார்க்ஸியமும்'என்றகட்டுரையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Some of The World's Leading Manufacturers of Scientific Instruments & Laboratory Equipment

CARL ZEISS, Oberkochen, West Germany:
Microscopes, Medical instruments, Surveying instruments and Photogrammetric Equipment.

PYE UNICAM LIMITED, Cambridge, England:
Spectrophotometers, pH Meters, Gas Chromatographs etc.

MSE SCIENTIFIC INSTRUMENTS, Crawley, Sussex, England:
A wide range of centrifuges, Atomix Blenders, homogenisers, Ultrasonic disintegrators, etc.

EDWARDS HIGH VACUUM, (Part of British Oxygen Company) Manor Royal, Crawley, Sussex, England:
Rotary Vacuum Pumps, Vacuum Coating Units, Metalising and freeze Drying Equipment.

SARTORIUS - WERKE, (Gottingen, West Germany):
Analytical Monopan balances, Carat balances and membrane filters, Electronic balances.

ROTRING - WERKE, (Hamburg, West Germany):
Technical drawing implements, stencils, templates etc.

AGENTs: LABORATORY COMPANY, Third Floor, Y. M. B. A. Building, Colombo 1. Telephone : 20257

MOST ITEMS ARE AVAILABLE EX-STOCK

Best Compliments

from

HANSCO

HARDWARE HOUSE

42, CLOCK TOWER ROAD,
JAFFNA.
Tele: 7665.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

M/s. M. T. M. MOHIDEEN

Licensed Dealers in

Rubber and Rubber Millers

285, Grandpass Road,
Colombo—13

Telephone: 23454

NADARAJAH & CO.

General Merchants & Commission Agents

Licensed Dealers in Rubber and Other Ceylon Produce

Telephone: 36084

196, Old Moor Street,
Colombo—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org